# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 மாசி 19 புதன்கிழமை (03 03 1999) UTHAYAN- A Lively National Tamil Daily கதிர்:82


# செம்மணிப் புதைகுழிகள் விவகாரம் வவுனியா நீதிமன்றத்துக்கு மாற்றம்?

## அரசு தரப்பில் ஆலோசனை

கொழும்பு, மார்ச் 3

**செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டும் விவகாரத்தை தொடர்ந்து கையாள முடியாத நிலையில் யாழ். நீதிமன்றங்கள் இருக்குமாயின் அந்த விடயத்தை அனேகமாக வவுனியா அல்லது கொழும்பு நீதிமன்று ஒன்றுக்கு மாற்றுவது குறித்து அரசுத் தரப்பில் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாக சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.**

விடுதலைப் புலிகளினால் அனுப்பப்பட்ட கடிதங்களை அடுத்து யாழ். நீதிமன்றங்கள் கடந்த ஒருவார காலமாகச் செயல் இழந்திருப்பது தெரிந்ததே.

செம்மணிப் புதைகுழி தொடர்பான விவகாரம்எதிர் வரும்5 ஆம் திகதிநீதிமன்றத்தில் எடுக்கப்பட இருக்கும் நிலையில் யாழ். நீதிமன்ற அமர்வுகள் இடை நிறுத்தப் பட்டுள்ளன.

தற்போதைய நிலைமை

[10 ஆம் பக்கம் பார்க்க]

## கீரிமலைப் பாதை ஊடாகச் செல்ல காங்கேசன் ஊழியருக்கு அனுமதி?

கொழும்பு. மார்ச் 3

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையை மீளஇயக்குவதற்கு வசதியாக அந்தத் தொழிற்சாலை ஊழியர்கள் கீரிமலைப் பாதையூடாக அங்கு சென்று வருவதற்கு அனுமதியளிக்கும் உத்தேச திட்டத்துக்கு வடக்கு பாதுகாப்புப்படை வட்டாரங்கள் பச்சைக்கொடி காட்டியுள்ளதாக கொழும்பு செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

சிமெந்து ஆலையை மீள இயக்குவது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற உயர்மட்ட மாநாடு ஒன்றையடுத்து அது குறித்து வடக்கு-

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் படை நடவடிக்கை எந்நேரமும் ஆரம்பிக்கலாம்!

### மாங்குளத்தில் தொடர் ஷெல் வீச்சு!!

வவுனியா, மார்ச் 3

மாங்குளம் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் தமது முன்னணி நிலைகளில் இருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நேற்று அதிகாலை 6-30 மணி முதல் தொடர் ஷெல் தாக்குதலை மேற்கொள்வதாக அங்கிருந்து வவுனியாவுக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

படை நகர்வுக்கான முன்னேற்பாடாக இந்தத் தாக்குதல் இடம்பெறுவதாகக் கருதப்படுகின்றது.

அதே நேரம் — வவுனியா ஊடாக ஆட்லறிகள் நேற்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தல் திகதியை மாற்றுவது குறித்து ஆலோசனை

### ஜனாதிபதி செயலகம் அறிக்கை

கொழும்பு, மார்ச் 3

தெற்குமாகாண சபைகளுக்கான தேர்தல் திகதியைச் சட்டபூர்வமாக மாற்றுவது தொடர்பாக ஜனாதிபதி பரிசிலனை செய்து வருவதாக ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைக்கான தேர்தலை ஏப்ரல்மாதம் முதலாம் திகதி நடத்தும் அரசின் முடிவுக்கு கத்தோலிக்க மக்களும் அதி மேற்றிராணியார் சபையினரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதையடுத்து ஜனாதிபதி இந்த விடயத்தில் கவனம் செலுத்துவதாகவும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தல் திகதி நிர்ணயம்:

## எதிர்ப்புத் தெரிவிக்க கத்தோலிக்கர்கள் முடிவு

கொழும்பு, மார்ச் 3

தெற்கு மாகாணசபைகளுக்கு எதிர்வரும் முதலாம் திகதி தேர்தல் நடத்துவதை ஆட்சேபித்து எதிர்வரும் 7 ஆம் திகதி நாடு முழுவதும் அமைதிப் போராட்டம் நடத்த கத்தோலிக்க திருச்சபை ஏற்பாடு செய்து வருகின்றது.

கத்தோலிக கிறிஸ்தவர்களின் முக்கிய தினத்தில் தேர்தல் நடத்துவது தமது மத

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் வீச்சு!

அம்பாறை, மார்ச் 3

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை 8 ஆம் பிரிவில் அமைந்துள்ள மின்மாற்றி ஒன்று நேற்று அதிகாலை ஒரு மணிக்கு கிரனேட் வீச்சுக்கு இலக்கானது.

சேதத்துக்குள்ளான மின்மாற்றியை திருத்தும்பணியை மின்சார சபை மேற்கொண்டுள்ளது. (உ-74-3)

## ஐ.தே.கவின் எம்.பி. இன்று புலிகளுடன் பேசுவார்?

வவுனியா, மார்ச் 3

இராணுவக் கட்டுப்பாடற்ற மடுப்பகுதிக்கு நேற்றுப் போய்ச் சேர்ந்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன அனேகமாக இன்று அங்கு வைத்து விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

நேற்று முன்தினம் மன்னார் சென்ற அவர் மன்னார் ஆயர் அதி வண. ராயப்பு யோசப் சகிதம் மடுவுக்கு நேற்றுப் போய்ச்சேர்ந்தார்.

மடுவில் உள்ள மக்களில்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## வெடி விபத்தில் 4 புலிகள் மரணம்!

### மாங்குளத்தில் திங்களன்று

வவுனியா, மார்ச் 3

மாங்குளத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் தமது அமைப்பின் உறுப்பினர்கள் நால்வரும் ஆதரவாளர் ஒருவரும் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

★ கப்டன் யாழ்மணி (செல்லச்சாமி ராஜன்)

★ கப்டன் துரைராஜா அல்லது சுரேந்திரன் (குமாரசுவாமி தயாபரன் — மட்டக்களப்பு)

★ லெப்டினன்ட் புகழேந்தி (கணபதிப்பிள்ளை ரவீந்திரன் — யாழ்ப்பாணம்)

[10 ஆம் பக்கம் பார்க்க]

### மின்மாற்றி தகர்ப்பு:

## செட்டியார் தெருவில் நேற்று ஏழு பேர் கைது!

கொழும்பு, மார்ச் 3

கொழும்பு செட்டியார் தெருவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மின்மாற்றி குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மேலும் ஏழு தமிழர்கள் நேற்றுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

செட்டியார் தெருப் பகுதியில் இரவு நேரங்களில் சல்லடை போட்டுத் தேடும் பணியில் பொலீஸார் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்ட 17 பேர் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (உ-3)

### கன்னாதிட்டியில் சடலம்

## தகவல் தருவோருக்கு ரூ. 25,000 சன்மானம்!

கொழும்பு, மார்ச் 3

யாழ்ப்பாணம் கன்னாதிட்டிப் பகுதியில் கடந்த மாதம் 2 ஆம் திகதி சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட செல்லத்துரை புவிச்சந்திரனின் கொலை தொடர்பாகத் தகவல் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என்று பொலீஸார் அறிவித்துள்ளனர்.

தகவல் தருபவருக்கு 25 ஆயிரம் ரூபா சன்மானம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா நகரில்

## விடுதியில் தங்குவோர் பட்டியல் பொலீஸாக்கு

### தினசரி தரவேண்டும்

வவுனியா மார்ச் 3

வவுனியாவில் உள்ள தனியார் விடுதிகளில் தங்கியிருப்பவர்களின் விவரங்களை ஒவ்வொரு நாளும் தமக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று வவுனியா பொலீஸ் அத்தியட்சகர் சகல தனியார் விடுதி உரிமையாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

தனியார் விடுதிகளின் உரிமையாளர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

[10 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணை

## ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான பங்குனி குளிர்த்தி அபிஷேக அறிவித்தல்

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான வருடாந்த பங்குனி குளிர்த்தி அபிஷேகம் 15—03—99 திங்கள் காலை ஆரம்பமாகி சித்திரை 14—04—99 வரை நடைபெறும்.

உபயகாரர்கள் முன்கூட்டியே ஆலயத்தில் தொடர்பு கொண்டு உங்களுடைய உபயத் திகதிகளைப் பதிவு செய்து கொள்ளவும்.

நிர்வாகம்,
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்.
(சி/ 6660)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி

பாலச்சந்தரின் குடும்பச்சித்திரம்

### கையளவு மனசு

05—03—99 வெள்ளிக்கிழமை முதல் 07—03—99 ஞாயிற்றுக்கிழமை வரை காலை 10. 30 க்கும் பிற்பகல 2, 30 க்கும் முதற்பாகம் காண்பிக்கப்படும்.

மிகுதிப் பகுதி தொடர்ந்து வரும் தினங்களில் காண்பிக்கப்படவிருக்கின்றது. விவரம் தினமும் உதயன் பத்திரிகையில் இரண்டாம் பக்கத்தில் பிரசுரமாகும்.

★ முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம்.
(63582)

## கண்ணீர் அஞ்சலி

புத்தூர் கமநல கேந்திர நிலைய குழு உறுப்பினரும் சிறுப்பிட்டி கிழக்கு விவசாய சம்மேளன தலைவரும் வலிகாமம் கிழக்கு விவசாய சம்மேளன ஒன்றியப் பொருளாளரும் ஆகிய

### சோமசுந்தரம் சிவபாலன்

(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

அவர்கள் 2-3-99 அன்று செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார். அவருக்கு விவசாய, சம்மேளனங்கள் சார்பாகவும் கமநல சேவைக்குழு சார்பாகவும் ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புத்தூர் கமநல கேந்திர நிலைய
பொறுப்பாக உத்தியோகத்தர்,
நிலைய ஊழியர்கள,
கமநல சேவைக்குழு அங்கத்தவர்கள்.
[63583]

## கண்ணீர் அஞ்சலி

யாழ். செயலக ஓய்வூதியக் கணிப்புக் கிளையின் பிரதம எழுதுநர்
திரு. சபாபதி சின்னத்துரை
அவர்களது அன்புத் துணைவியார்
திருமதி

### இராஜேஸ்வரி சின்னத்துரை

காலமானார். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கணக்காளரும், ஓய்வூதியக் கணிப்புக்கிளை,
ஓய்வூதியக் கொடுப்பனவுக்கிளை, நிதிக்கிளைச்
சகல உத்தியோகத்தர்களும்.
மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்.
(63537)

## கண்ணீர் அஞ்சலி

ஓய்வு பெற்ற நில அளவையாளரும்
சிறுப்பிட்டி கிழக்கு
சிறு விவசாயிகள் சம்மேளனத் தலைவரும்,
சிறுப்பிட்டி தெற்கு சனசமூக நிலையத் தலைவருமான

### சோமசுந்தரம் சிவபாலன்

(சிறுப்பிட்டி)

அவர்களின் மறைவு குறித்து சோகமடைந்துள்ள அவரின் மனைவி, மகள், உறவினர்கள் யாவர்க்கும் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விவசாயிகள் சம்மேளனம், சிறுப்பிட்டி கிழக்கு,
சனசமூக நிலையம், சிறுப்பிட்டி தெற்கு,
சிறுப்பிட்டி வாழ் மக்கள்.
(சி/6668)

## மெய்வல்லுநர் போட்டி

உரும்பிராய், மார்ச் 3

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2. 30 மணிக்குபதிலதிபர் திருமதி சி. பவானந்தன் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞான சுந்தரமும் சிறப்பு விருந்தினராக அ. ஈஸ்வரநாதனும் கௌரவ விருந்தினராக ஆசிரிய மணி அ. பஞ்சாட்சரமும் கலந்து கொளவர். (உ-154-72)

★ ★ ★

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆயர் தியோகுப்பிள்ளை விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கின்றது.

இந்தப்போட்டியில் திருமதி ஜெபா தேவராஜா பிரதம விருந்தினராகவும், தென்மராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. குமாரசாமி கௌரவ விருந்தினராகவும் பங்குபற்றுவர். (உ 3)


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி
இன்று முதல்
விஜயகாந்த், ரூபினி
நடித்த
ஆனஸ் ராஜ்
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)
T. P. No. 070-212223
(63520)

## ராஜா

யாழ்ப்பாணம்.
கடைசி வாரமாக
அஜித் - தேவயானி
ஹீரா - மணிவண்ணன்
கரன் நடித்த
காதல் கோட்டை.
இன்று காட்சிகள்
10-30, 2-30,
05-03-99 முதல்
உதவிக்கு வரலாமா
(சி/6565)

## நாகம்ஸ்

சுன்னாகம்.
கார்த்திக் - ரம்பா
கவுண்டமணி
நடித்த
உள்ளத்தை அள்ளித்தா
ரசிகர்களின் பஸ் போக்குவரத்து வசதி கருதி காட்சி நேரங்களில் மாற்றம்
புதிய நேரப்படி
11-00, 2-30
(63501)

## NEWTON

(N. S. C.)
342, ஸ்ரான்லி வீதி, யாழ்.
தமிழ் — ஆங்கில
தட்டச்சு வகுப்புக்கள்
ஆரம்பம்: 05 - 03 - 99
காலை 9 முதல் 2 வரை.
தட்டச்சு, றோணியோ
வேலைகள்
செய்து கொடுக்கப்படும்.
(63588)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
இ. மயூரன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இராஜேஸ்வரி சின்னத்துரை

அவர்களின் திடீர் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாணவர்கள், 12E (உயிரியல்),
யாழ். இந்துக் கல்லூரி.
(63580)

## மரண அறிவித்தல்கள்

### அப்பாத்துரை முருகையா

அப்பாத்துரை முருகையா நேற்று (02-03-99) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு திருமதி அப்பாத்துரை கண்மணி தம்பதிகளின் புதல்வனும் ஞானம்மாவின் அன்புக் கணவரும் உதயசூரியன் [மாலைதீவு], ராஜினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி [இந்தியா], யோகேந்திரன் [ஓமான்] ஆகியோரின் மாமனாரும் ஜலக்ஷி, தீயாலக்ஷி, லக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவஞானம் [சிங்கப்பூர்], குமாரவேல் [யாழ்ப்பாணக் கல்லூரி], காலஞ்சென்ற சண்முகலிங்கம், பாலபாஸ்கரன் [கனடா], மனோரஞ்சிதம் [இந்தியா], தனலக்ஷ்மி [ஜேர்மன்], தங்கலக்ஷ்மி [கொழும்பு], இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சந்திரசிவன், தங்கலக்ஷ்மி, சுமதி, நவரட்ணம் [ஜேர்மனி], சங்கரலிங்கம், பாக்கியநாதன் [யாழ் கல்வித் திணைக்களம்], அரியரத்தினம், றோசம்மா, நல்லம்மா ஆகியோரின் மைத்துனரும் ஓய்வுபெற்ற அதிபர் திருநாவுக்கரசு அவர்களின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-03-99) புதன்கிழமை 1-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஞானம்மா [மனைவி]
குமாரவேல் [சகோதரன்]
பொன்னையா லேன்,
வண். வட்மேற்கு, ஆனைக்கோட்டை.
(63589)

திருமதி

### பாக்கியம் அம்பலவாணர்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி பாக்கியம் அம்பலவாணர் அவர்கள் 2-3-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் (இளைப்பாறிய தபால் அதிபர், மலேசியா) அவர்களின் அன்பு மனைவியும் விவேகானந்தன் (ஜேர்மனி), சச்சிதானந்தன் (கனடா), சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலாம்பிகை, காலஞ்சென்ற சிவஞானவதியார், தனராசா (இளைப்பாறிய உதவி முகாமையாளர், இலங்கை வங்கி) ஆகியோரின் அன்பு மாமியாரும் நாகேஸ்வரி (கனடா) வசந்தமாலா (கனடா), பத்மாவதி (கனடா), சாந்தகுமார் (லண்டன்), அருட்செல்வன் (கனடா), குருபரன் (கனடா), கௌசல்யா (கனடா), சோமசீலன் (கனடா), யசோதா (லண்டன்), முரளிதரன் (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3-3-1999) புதன்கிழமை நண்பகல் 12 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
த. சகுந்தலாதேவி
(மகள்)
வட்டுக்கோட்டை தெற்கு,
வட்டுக்கோட்டை.
(63581)

### திருமதி இராஜேஸ்வரி சின்னத்துரை

[ஓய்வுபெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ் செயலகம்)

திருமதி இராஜேஸ்வரி சின்னத்துரை 2-3-1999 அன்று காலமானார்.

அன்னார் சபாபதி சின்னத்துரை [பிரதம எழுதுவினைஞர், ஓய்வூதியக்கிளை, யாழ். செயலகம்] அவர்களின் அருமை மனைவியும் குகன் [மாணவன், யாழ். இந்துக் கல்லூரி கணிதப்பிரிவு 1999], மயூரன் [மாணவன், யாழ். இந்துக் கல்லூரி, உயிரியல் பிரிவு 2000] ஆகியோரின் அன்புத் தாயாரும் கோப்பாய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற அ. சங்கரப்பிள்ளை—இராசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆ. சபாபதி—பார்வதி தம்பதிகளின் அருமை மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று [2-3-99] செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனக்கிரியை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. சின்னத்துரை
[கணவன்]
3 ஆம் கட்டை,
கல்வியன்காடு.
[சி/6669]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவின் புதிய ஜனாதிபதியாக ஒபசன்ஜோ தெரிவு

## 15 வருட காலராணுவ ஆட்சிக்கு முடிவு

லாகோஸ், மார்ச் 3

நைஜீரியாவில் 15 ஆண்டுக்கால இராணுவ ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது. புதிய ஜனாதிபதியாக 61 வயது நிரம்பிய முன்னாள் இராணுவ ஜெனரல் ஒலூ சகன் ஒபசன்ஜோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

1979 ஆம் ஆண்டு அதாவது 30 ஆண்டுகளுக்கு முன் தனது ஜனாதிபதிப் பதவியை இராஜினாமாச் செய்த ஒபசன்ஜோ சிவிலியன் ஒருவரிடம் தனது ஆட்சியைக் கையளித்தார்.

ஆனாலும் இராணுவத்தினர் அவரது ஆட்சியைக் கவிழ்த்து விட்டு இராணுவ ஆட்சியை மீண்டும் அமுல் படுத்தினர்.

அன்று தொடக்கம் தற்போதைய தேர்தல் வரை நைஜீரியாவில் இராணுவ ஆட்சியே இடம்பெற்று வந்தது.

ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ ஜெனரல்களினதும் நைஜீரியாவின் பணம் படைத்த மக்களினதும் ஆதரவுடன் ஒபசன்ஜோ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார் என்று கூறப்படுகிறது.

இராணுவ ஆட்சியாளர் அப்துல் சலாம் அபூபக்கரினால் மூன்று வருடகாலம் சிறைவைக்கப்பட்டு தேர்தலுக்கு முன்னர் தான் ஒபசன்ஜோ விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

அதே சமயம் நடந்து முடிந்த தேர்தல்களில் பெருமளவு மோசடிகள் இடம் பெற்றதாகச் சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் ஒபசன்ஜோவின் ஜனநாயகக் கட்சியின் மீதோ அல்லது எதிர்க்கட்சியான சகல மக்கள் கட்சியின் மீதோ குற்றங்களைச் சுமத்தவில்லை.

கண்காணிப்பாளர்களில் ஒருவரான அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் வாக்களிக்க வந்தவர்களை விட அதிக அளவு வாக்குச் சீட்டுக்கள் பெட்டிகளில் இருந்தன எனக்கூறியுள்ளார்.

நைஜீரியாவில் இறுதியாக 1983 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது. அப்பொழுது இடம்பெற்ற பெரும் மோசடிகளின் காரணமாக அங்கு தொடர்ச்சியாக இராணுவ ஆட்சி ஏற்பட்டது. அதனை நீக்கும் பொருட்டே தற்போது தேர்தல் நடைபெற்றது.

ஒற்றுமையை வளர்க்கவும் ஜனநாயகத்தை முன்னேற்றமடையச் செய்யவும் தாம் அயராது சேவை செய்யப் போவதாக ஒபசன்ஜோ கூறியுள்ளார்.

(இ-க)

## சர்வதேச மகளிர் விருது

புதுடில்லி, மார்ச் 3

மகளிர் மேம்பாட்டுக்கு நற்பணி ஆற்றியதற்காக இந்தியப் பெண் ஒருவருக்கு சர்வதேச மகளிர் தின விருது வழங்க ஐ.நா. உலக உணவுத் திட்ட அமைப்பு தீர்மானித்துள்ளது.

இந்தியப் பெண்களான டாக்டர் மினி மாற்றியோ என்பவரே இந்த விருதைப் பெற உள்ளார்.

முதன் முதலாக ஒரு இந்தியர் இந்த விருதைப் பெறுவது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் பழங்குடி மகளிரிடையே தொழில் நாட்டத்தை ஏற்படுத்தியமை மற்றும் பெண்களை தொழில் அதிபர்களாக ஆக்கியுள்ளமை போன்ற பெண்களுக்கான பல செயற்பாடுகளில் இவர் அயராது உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-க)

## டயானாவைப் போன்று நான் வஞ்சிக்கப்பட்டேன்

### மொனிக்கா கூறுகிறார்

லண்டன், மார்ச் 3

''டயானா வஞ்சிக்கப்பட்டதைப் போன்று நானும் வஞ்சிக்கப்பட்டேன்'' என்கிறார் கிளின்ரன் பாலியல் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட முன்னாள் வெள்ளை மாளிகை உதவியாளரான மொனிக்கா லுவின்ஸ்கி.

''என்னைக் காதலிப்பதாகத் தெரிவித்த ஒரு மனிதனால் நான் வஞ்சிக்கப்பட்டேன்'' என்கிறார் மொனிக்கா.

''அதிகாரத்திலுள்ள மனிதரொருவருடன் டயானா காதல் வசப்பட்டார். அதே மனிதர் டயானாவைத் துன்புறுத்துவதற்கு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தினார்

இதே வகையில் தான் அதிகாரத்திலுள்ள ஒரு மனிதர் என்னைத் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி வஞ்சித்தார் என்று மொனிக்கா, பிரிட்டனின் 'சண்டே மிரர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்திருக்கின்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்—

''உங்களுக்கு ஞாபகம் இருக்கட்டும் நான் அந்த மனிதரைக் காதலித்தேன் மனதாரக் காதலித்தேன். இந்த உறவில் நான் கைதியாக இருந்தேன். எங்கும் என்னால் ஓடி ஒளித்துக் கொள்ள முடியவில்லை என்றார்.

இதற்கிடையில் பிரிட்டிஷ்ரான எழுத்தாளர் அன்ரூ மோர்டன் மொனிக்கா லுவின்ஸ்கி பற்றி நூல் ஒன்றை எழுதியிருக்கின்றார்.

டயானாவின் கதையையும் இவர் ஏற்கனவே நூல் வடிவில் பிரசுரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-10)

## பீஹார் ஆட்சிக் கலைப்பு தீர்மானம் மாநிலங்களவையில் தாக்கலாகாது

புதுடில்லி, மார்ச் 3

பீஹாரில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஜனாதிபதி ஆட்சிக்கு அங்கிகாரம் பெறும் தீர்மானத்தை மத்திய அரசு மாநிலங்களவையில் தாக்கல் செய்யாமல் இருக்கக் கூடும் என பாரதீய ஜனதா கட்சி சூசகமாகத்தெரிவித்துள்ளது.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பாரதீய ஜனதாக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஜே. பி. மாத்

உலக அரங்கில்

தூர் இந்த விஷயம் குறித்து மத்திய அரசு மூன்று வழிகளை பின்பற்றும் எனக் கூறினார்.

ஒன்று மாநிலங்களவையில் அந்த தீர்மானத்தை தாக்கல் செய்யலாம். இரண்டு தாக்கல் செய்யாமல் இருக்கலாம். மூன்று அந்தத் தீர்மானம் காலாவதியாகி விடப்படலாம் என்றார்.

இவை அனைத்துக்கும் ஒரே விளைவுதான் ஏற்படும் என்று கூறிய மாத்தூர் மாநிலங்களவையில் அந்தத்தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டால் அது முறியடிக்கப்படும் என்பதை ஒப்புக்கொண்டார்.

(இ-10)

## வலி இல்லாத ஊசியால் 'ஜெட்' வேகத்தில் மருந்து!

லண்டன், மார்ச் 3

ஊசி இல்லாமல் மருந்து தோலுக்குள் சென்றால் எப்படி இருக்கும்? இங்கிலாந்தைச் சேர்ந்த ''வெஸ்டன் மெடிக்கல்'' நிறுவனம் ஆய்வு செய்து ஜெட்வேகத்தில் தோலுக்குள் மருந்தைச் செலுத்தும் நவீன ''இண்ட்ராஜெக்ட்'' (படம்) ஊசியை வடிவமைத்துள்ளது.

தடுப்பூசி உட்பட பெரும்பாலான ஊசி மருந்துகளை இந்த நவீன வலி இல்லாத ஊசி மூலம் செலுத்திவிட முடியும்.

அமெரிக்காவில் மட்டும் ஊசி காரணமாக நோய்த் தொற்று ஏற்பட்டு ஆண்டுக்கு 10 லட்சம் பேர் பாதிக்கப்படுகின்றனர். இதனால் ஊசிபோடப் போனது போக, ஊசி மூலம் ஏற்பட்ட நோய்த் தொற்றுக்குச் சிகிச்சைபெற வேண்டியுள்ளது.

ஆனால் இந்த நவீன ''இண்ட்ராஜெக்ட்'' ஊசி மூலம் மருந்தைச் செலுத்தும்போது தோலில் துளை ஏற்படாது இதனால் நோய்த் தொற்றுக்கு வழி இல்லை.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் இன்சுலின் ஊசி மருந்தை வலியின்றிப் போட்டுக்கொள்ள ஏற்கனவே ''ஜெட் இன்ஜெக்ஷன்'' உள்ளது. இது போன்று தினந்தோறும் ஊசி போட்டுக்கொள்ளும் அவசியம் உள்ளவர்களுக்கு இந்த வலி இல்லா நவீன ஊசி ஒரு வரப்பிரசாதம் என்று கூறப்படுகிறது.

## கண்ணிவெடிகள் அகற்ற 3,000 கோடி டொலர்

உலகெங்கும் பத்துக்கோடி கண்ணிவெடிகள் காணப்படுவதாகவும், இவற்றை அகற்றுவதற்கு 3000 கோடி டொலர்கள் தேவைப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

ஒட்டாவா உடன்படிக்கையின்படி உலகில் கண்ணிவெடிகளை இல்லாதொழிப்பதே முக்கிய நோக்கமாகும்.

ஏனெனில் மாதாந்தம் கண்ணிவெடிகளால் 2000பேர் கொல்லப்படுகிறார்கள். இவர்களில் 90சதவீதமானவர்கள் குடிமக்கள்.

உலகில் கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக ஆபிரிக்கா, மத்திய கிழக்கு, மத்திய ஆசியா, தென்கிழக்கு ஆசியா, ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

மத்திய ஆசிய பகுதிக்குள் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்தியா, இலங்கை என்பன அடங்கும்.

மத்திய ஆசியாவில் 1 கோடி 30 லட்சம் கண்ணிவெடிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

## அடுத்த தேர்தலில் மத்தியில் கூட்டணி அமைக்க காங்கிரஸ் விரும்பவில்லை

புதுடில்லி, மார்ச் 3

இந்தியாவில் கூட்டணி ஆட்சி முறை தோல்வி அடைந்திருப்பதால் மத்தியில் கூட்டணி அமைப்பதற்கு காங்கிரஸ் கட்சி விரும்பவில்லை என அந்த கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான முகர்ஜி தெரிவித்துள்ளார்.

சண்டிகாரில் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே முகர்ஜி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்வேறு சமுதாயங்களைக் கொண்ட இந்தியாவில் கூட்டணி ஆட்சிமுறை சரியானதாக இருக்க முடியாது என்றும் —

அதே சமயம் வாஜ்பாய் அரசு பதவி துறக்கும் நிலை ஏற்பட்டால் கூட்டணி ஆட்சி அமைவது தவிர்க்க முடியாதது ஆகிவிடும் என்றும்— முகர்ஜி கூறினார்.

இதேவேளை — அடுத்த பொதுத்தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றால் மார்க்சிஸ கம்யூனிஸ்ட்கட்சி மகிழ்ச்சி அடையும் என மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதி பாஸு தெரிவித்துள்ளார்.

பாரதீய ஜனதா அரசை நீக்குவதே தமது கட்சியின் தலையாய நோக்கம் என்றும் அவர் கூறினார்.

அதற்காக மாற்று அரசு ஒன்றை அமைக்க காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு அளிக்கப் போவதாகவும் ஜோதிபாஸு தெரிவித்தார்.

(இ-க)

## ஈராக்குக்கு ஏற்பட்ட சேதங்களை இந்திய உளவுச் செய்மதி படம் எடுத்தது

வாஷிங்ரன், மார்ச் 3

அமெரிக்க விமானத் தாக்குதலின் போது ஈராக்கின் இராணுவ இரகசிய தகவல் மையம் சேதமடைந்தது பற்றிய தகவல்களை இந்திய வேவுபார்க்கும் செயற்கைக்கோள் படமெடுத்துள்ளது. என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப்படங்களை அமெரிக்க நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ளது.

இந்திய விஞ்ஞானிகளின் செயல் திறமையே இதற்குக் காரணம் என அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்திய அணு ஆயுதப் பரிசோதனைகள் பற்றி தகவல்கள் அமெரிக்க செயற்கைக் கோள்களுக்கு கிடைக்காமல் போனதும் இந்திய விஞ்ஞானிகளின் சாதனையே எனவும் அந்த விஞ்ஞானி கூறியுள்ளார்.

கடந்த வருடம் ஈராக் மீது அமெரிக்கா மற்றும் பிரிட்டன் மேற்கொண்ட விமானத்தாக்குதலால் ஈராக்கின் இரகசியத் தகவல் மையம் சேதமடைந்தது என அமெரிக்கா அறிவித்திருந்தது தெரிந்ததே.

எனினும் இதனை ஊர்ஜிதம் செய்யமுடியாத நிலையில் உலக நாடுகள் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-க)

### உலகைக் கண்காணிக்க

## அமெரிக்காவின் நவீன செயற்கைக் கோள்

வாஷிங்ரன், மார்ச் 3

உலகெங்கும் உள்ள முக்கியமான பகுதிகளை 24 மணி நேரமும் கண்காணிப்பதற்கான புதிய செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த அமெரிக்கா திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கென அமெரிக்காவின் உயர் இரகசிய கண்காணிப்பு அலுவலகம் சிறிய மற்றும் மலிவான புதிய செயற்கைக் கோள்களை தயாரித்து வருவதாக வாஷிங்ரன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு மே மாதம் இந்தியா மேற்கொண்ட அணு ஆயுதப் பரிசோதனைகள் தொடர்பான தகவல்கள் அனைத்தும் அமெரிக்க செயற்கைக் கோள்களுக்கு கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நிலைமையை அடுத்தே அமெரிக்கா 24 மணி நேரமும் கண்காணிப்பில் ஈடுபடும் புதிய செயற்கைக்கோள் ஒன்றை விண்ணில் செலுத்தத் திட்டமிட்டுள்ளது.

(இ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஏழாலை தெற்கு தோப்பில் உள்ள 8 பரப்பு பனை, மா, தேக்கு மரங்களுடன் கூடிய காணி (தண்ணீர் பங்குடன் கூடியது) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி தே. தவராசா. 393/37, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

[63545]

### தவறிவிட்டது

எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (395421190V) 1-3-99 முதல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திருமதி காந்திமதி விஜயரட்னம் 82, நல்லூர் குறுக்கு வீதி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(63563)

### இலகு திருமண சேவை

1963 உத்தரட்டாதி கிரக பாவம் குறைந்த நகைத் தொழிலில் ஈடுபாடுடைய பட்டதாரி மணமகனுக்கு மணப்பெண் தேவை. உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களுக்கு. தொடர்பு: ஞாயிறு காலை துரைவிமலா, கே. கே. எஸ். வீதி, யாழ். நாச்சிமார் கோயிலடி.

[63564]

### அன்பளிப்பு

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு இருபத்தைந்து மில்க்வைற் பேஓ ரகளுக்கு திருவள்ளுவர்ப ம் அன்பளிப்பாக வழங்கப்படும். நேரிலோ தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம். இ. தவகோபால், 525/2, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(சி/6652)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 31, மான் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம்.

(63332)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழன் பிற்பகல் 2-30 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு நாவுக்கரசு கிருஷ்ணகுமார் தலைமையில் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(இ-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் சுப்பிரமணியம் சிவயோகநாதன்
(சிவம்)

துளிர்வில் 01-08-1961 | உதிர்வில் 02-02-1999

சிறந்திங்கு நாமும் வாழ தனை ஈந்த அன்புத் தெய்வம்
பிறந்திங்கே கலைத்தாய் போற்றும் புகழ் தாங்கி வாழும் போதே
மறந்தொண்ணாத் துயரம் தந்து எமை இங்கு தவிக்கவிட்டு
பறந்தங்கே சென்று இன்று திங்களொன்று ஆனதுவோ!

இன்றைய வீட்டுக்கிருத்திய வைபவத்திலும், ஆத்ம சாந்திக்கிரியைகளிலும் பங்குபற்றி மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

- குடும்பத்தினர்

இடைக்குறிச்சி,
வரணி.

(63560)

## குடியேற அனுமதிக்கப்படாதோரின் காணி, வீடு விவரங்கள் சேகரிப்பு

இடம்பெயர்ந்து மீளக்குடியேற அனுமதிக்கப்படாத மக்களின் காணி, வீடு சம்பந்தமான விபரங்கள் யாழ். மாவட்ட கிராம அலுவலர்களினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த விவரம் புள்ளிவிபரக் கணக்கெடுப்பாகவே மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்ற போதிலும் பல்வேறு சந்தேகங்கள் மக்கள் மத்தியில் குறிப்பாக வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசினால் கடந்த காலங்களில் பலாலி விமான தள விஸ்தரிப்புக்கென காணிகள் சுவீகரிக்கப்பட்டன.

இதே போன்று உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்படாத காணிகளையும் அரசு சுவீகரிக்கவே இத்தகைய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்று மக்கள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது.

(இ-86)

## விக்னா கல்வி நிறுவனம்

**O/L DAY CLASS**
(8.30 - 2.30)
பிரிவு 1 இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 இற்கான வகுப்புகளும், விசேட மாதிரிப் பரீட்சைகளும் நடத்தப்படுகின்றன.
★ விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(63576)

குறைந்த கட்டணம் நிறைந்த சேவை

உள்நாட்டு வெளிநாட்டுத் தொலைத் தொடர்புகளுக்கு

## மனோறாஸ் கொமினிக்கேஷன் சென்ரர்
## Manoras Communication Centre

"திகிரி", மானிப்பாய் வீதி,
கைதடி தெற்கு, கைதடி.

உள்ளூர்த் தொலைபேசித் தொடர்புகளுக்கு: 021 - 3046
வெளிநாட்டுத் தொடர்புகளுக்கு: 0094 - 021-3046

(63572)

## கண்ணீர் அஞ்சலி

சமூகத் தொண்டன்
திரு. தயானந்தனின் அருமைத் தந்தையார்

### அமரர் கணபதிப்பிள்ளை நிற்சிங்கம்

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவப்பிரம்மஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியர் குடும்பத்தினர்.

இலங்கை இந்துமத குருபீடாதிபதி,
அருள்ஜோதி நிலையம்,
யாழ். நாயன்மார் கட்டு.

(63574)






(சி/6 93)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார நிலை சம்பந்தமாக 6 குழுக்கள் பரவலாக ஆராய்வு

வலிகாமம் தெற்கு, மார்ச் 3

மக்கள் நலன் காக்கும் திட்டத்தின் கீழ் குடாநாட்டின் பல இடங்களிலும் சுகாதாரத் திணைக்களத்தினால் சுகாதாரம் சம்பந்தமான பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

சுகாதாரத் திணைக்களத்தினரால் தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்கள் குழுவினர் பொதுச் சுகாதார பரிசோதகர்களின உதவியுடன் இந்த ஆய்வுகளைச் செய்து வருகின்றனர்,

மானிப்பாய் சுகாதார வைத்தியர் பிரிவில் இரண்டு குழுவினரும் தெல்லிப்பழை சுகாதார வைத்தியர் பிரிவில் இரண்டு குழுவினரும் சங்கானை, கொடிகாமம் சுகாதார வைத்தி ர் பிரிவுகளில் தலா ஒவ்வொரு குழுவினருமாக மொத்தம் 44 பேர் கொண்ட ஆறு குழுக்கள் இதில் ஈடுபட்டுள்ளன.

மலேரியா, குடல் புழு நோய், பற்சூத்தை, போஷாக்கு குறைவு, மலசல கூடம் இல்லாமை போன்ற பல துறைகளில் இவர்கள் ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றனர்.

வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் உள்ள மயிலணி கந்தசாமி கோயிலடியைச் சூழ உள்ள இருநூறு குடும்பங்களிடையே தெல்லிப்பழை சுகாதார பரிசோதகர் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இப் பகுதியில் மலேரியா நோயின் தாக்கம் கூடுதலாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

எட்டுப் பயிற்சியாளர்களைக் கொண்ட குழுவொன்று இங்கு ஆய்வுகள மேற்கொண்டு வருகின்றது.

இதே போன்று தெல்லிப்பழை சுகாதார வைத்தியர் பிரிவில் உள்ள மல்லாகம் — குளமங்கால் தேவாலய பகுதியில் குடற்புழுநோய் இனம் காணப்பட்டுள்ளது

இப்பகுதியிலும் இருநூறு குடும்பங்களை உள்ளடக்கி ஏழுபேர் கொண்ட குழுவொன்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

சுமார் ஒரு மாதகாலம் வரை இந்த ஆய்வு வேலைகள் நடைபெற்று, இனம் காணப்பட்டுள்ள மலேரியா குடற்புழுநோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான சுகாதார நடவடிக்கைகளை சுகாதாரத் திணைக்களத்தினர் எடுக்கவுள்ளனர்.

(இ-152)

## சைவ பரிபாலன சபையின் வருடாந்த மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ். சைவபரிபாலன சபை ஆண்டுதோறும் நடத்தி வரும் சைவ மாநாடு 5 வருட இடைவெளிக்குப் பின்னர் எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் மூன்று தினங்களுக்கு யாழ். நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி மாநாட்டில் சமயச் சொற்பொழிவுகள், திருமுறை ஓதல், ஆய்வரங்கு, கலை நிகழ்ச்சிகள் மற்றும் இளைஞர் கருத்தரங்குகள் என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சமயப் பெரியார்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் இம் மாநாட்டில் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

## பஸ் நிலையப் பகுதி வியாபார நிலையங்கள் அகற்றப்படுகின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ். பஸ் நிலையப்பகுதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடி மற்றும் வாகன விபத்துக்கள் ஆகியவற்றைத் தவிர்க்கும் நோக்குடன் யாழ். நகரத்தளபதி அலுவலகத்தில் கடந்த 18 ஆம் திகதி நடத்தப்பட்ட மாநாட்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத்தீர்மானங்களில் ஒன்றான நகரின் வீதியோரங்களில் உள்ள நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த வியாபாரிகள் தொடர்ந்து இயங்கக்கூடிய வகையில் அவர்களுக்கு பஸ் நிலையப்பகுதியிலிருந்து முனியப்பர் கோயிலுக்குச் செல்லும் வீதியில் இடம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது

(இ-15)

## 16 ஆயிரம் அதிபர்களுக்கு அதிகரித்த சம்பளம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

பி. ஸி. பெரேரா சம்பள ஆணைக்குழுவின் சிபார்சுக்கமைய 16 ஆயிரம் பாடசாலை அதிபர்களுக்கு 1997 ஜனவரி தொடக்கம் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

இதேவேளை —

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட அதிபர் சேவை 1994 ஒக்ரோபர் 6 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்ததாகக் கருதப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதிபர் சேவையின் முதலாம் 2 ஆம், 3 ஆம் தரங்களில் உள்ள அதிபர்களுக்கு 1992 ஆம் ஆண்டு முதல் 37 ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சுச் சுற்றறிக்கைக்கு இணங்க புதிய சம்பளத்திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது.

1995 ஜனவரிக்கும் 1996 டிசெம்பருக்கும் இடையில் ஓய்வு பெற்ற அதிபர்களின் ஓய்வூதியத்தை புதுக்கியமைப்பதற்கு கல்வியமைச்சு சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## அரண் நீக்கம்

நீண்ட காலமாக வீதிப் போக்குவரத்துக்குத் தடையாக இருந்த பாதுகாப்பு அரண் நீக்கப்பட்டுள்ளது.

மருதனார்மடம் சந்திக்கு அண்மையாகக் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மண் பாதுகாப்பு அரணே நீக்கப்பட்டுள்ளது. (இ-86)

## கல்வியியல் முதுமாணி பாடநெறியில் யாழ். ஆசிரியர் சேரமுடியாத நிலை

அச்சுவேலி, மார்ச் 3

தேசிய கல்வி நிறுவகத்தின் ''கல்வியியல் முதுமாணி'' [எம். ஈ டி] பாடநெறியில் யாழ். மாவட்ட ஆசிரியர்கள் சேர்ந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதிநாள் பெப்ரவரி 15 ஆம் திகதி ஆகும் ஆனால் யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு இதுவரை விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கவில்லை.

மகரகம தேசியகல்வி நிறுவகம், பட்டப்பின் கல்வி டிப்ளோமா தகைமையுள்ளபட்டதாரி ஆசிரியர்களுக்கு ''கல்வியியல் முதுமாணி'' பாடநெறியை ஆரம்பித்துள்ளது.

கல்வியியல்முதுமாணி பாடநெறி 1999 - 2000 ஆண்டில் இணைந்து கொள்வதற்கு உரிய விண்ணப்பப்படிவங்களை தேசிய கல்வி நிறுவகத்தில்இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு விண்ணப்பப்படிவங்கள் இதுவரை கிடைக்கவில்லை என கூறப்படுகின்றது.

கல்வியியல் முதுமாணி பாடநெறிக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதிநாள் பெப்ரவரி 15 என அறிவிக்கப்பட்டிருப்பதால், யாழ். மாவட்ட ஆசிரியர்கள் பயிற்சி நெறியில் சேர்ந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

(இ-11)

## கப்பல்களில் செ. மிளகாய் தேங்காய், சிகரெட்

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'ஓஷன் சக்ஸஸ்' 'ஹெந்தல' ஆகிய இரு கப்பல்களிலிருந்து தேங்காய், செத்தல் மிளகாய், சிகரெட், தேங்காய் எண்ணெய் ஆகியன இறக்கப்பட்டு வருகின்றன.

ஒரு தொகுதி தேங்காய்களும், ஆயிரக்கணக்கான மூடை செத்தல் மிளகாயும், தேங்காய் எண்ணெயும் இந்தக் கப்பல்களில் எடுத்து வரப்பட்டுள்ளன.

வர்த்தகக் கப்பல் கம்பனிக்குச் சொந்தமான 7 இழுவைப் படகுகளும் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதிக்குச் சொந்தமான இரு இழுவைப் படகுகளும் பொருள்களை இறக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

'ஓஷன் சக்ஸஸ்' கப்பல் பொருள்களை இறக்க யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதிக்குச் சொந்தமான இழுவை படகுகளே பயன் படுத்தப்படுகின்றன (இ-173)

## காணாமற் போனோர் வாரம் மே 24 இல்

கொழும்பு, மார்ச் 3

காணாமற் போனவர்களை நினைவு கூரும் சர்வதேச வாரம் எதிர்வரும் மே மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடைபெறும்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஆசிய பிராந்தியத்திற் காணாமற் போனவர்கள் பற்றிய நிறைவேற்றுக் குழுவின் விசேட கூட்டம் ஒன்றில் இது குறித்துத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தோனேசியா, பிலிப்பீன்ஸ், இலங்கை, ஜம்மு காஷ்மீர் ஆகியவற்றைச் சேர்ந்த மனித உரிமைக் குழுக்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

காணாமற்போன சிறுவர்களின் பெற்றோர் சங்கத் தலைவர் சந்தாபீரிஸ் இது குறித்துத் தெரிவிக்கையில, ஆசிய பிராந்தியத்தில் காணாமற்போனவர்கள் பற்றிய ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டு ஐ. நா. நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்படும் என்றார். (இ—6)


உ

ஓம் சக்தி

# பிரம்மோபதேச யக்ஞோபவீத தாரண சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருஷம் மாசிமாதம் 20 ஆம் திகதி (04 - 03 - 99) வியாழக்கிழமை அத்த நக்ஷத்திரமும் துவிதீயை திதியும் சித்தயோகமும் சுக்கிரகஹோரையும் கூடிய முற்பகல் 11 மணி 30 நிமிஷ முதல் 12மணி 15 நிமிஷம் வரையிலுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில்

பிரம்மஸ்ரீ ச. சின்னஸ்வாமி சர்மா இந்திராக்ஷி அம்மா
பிரம்மஸ்ரீ ஏ. சோமசுந்தர ஐயர் சரஸ்வதி அம்மா அவர்களின் பேரனும்
எங்களின் ஏக புத்திரனுமாகிய செல்வன்

## சிரஞ்சீவி சின்மயசர்மனுக்கு

பிரம்மோபதேச யக்ஞோபவீத தாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் அத்தருணம்தாங்கள் தங்கள் இஷ்டமித்திர குடும்ப சகிதம் வருகை தந்து உபவீதனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்

பிரம்மஸ்ரீ ச. [illegible]
கமலேஸ்வரி [illegible]

சீரணி, சண்டிலிப்பாய். (63510)



## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### கந்தர் துரைசிங்கம்

தோற்றம்: 13—07—1939

மறைவு: 01—02—1999

எங்கள் குடும்பத் தலைவராக இருந்து
எம்மை வழி நடத்திய தங்கள்
நினைவு என்றும் எம் உள்ளத்தே
இளமையாக இருந்து மீண்டும் மீண்டும்
எமக்கு வழி காட்டும்.


தங்கள் ஆத்மா சாந்திபெற வெள்ளெருவைப் பிள்ளையாரை இறைஞ்சுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

கோப்பாய். (63541)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 3 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



செல்வன்

## மகேந்திரன் பிரேமானந்

| ஆண்டவன் தந்தது | அவரே அணைத்தது |
| --- | --- |
| 1979 – 07 – 01 | 1996 – 03 – 03 |

எம் முத்தே! செல்வமே! மாணிக்கமே!
மூன்றாண்டுகள் சென்றாலும் முடியாதையா எம் சோகம்
உங்கள் செல்ல மொழிகேட்கத் துடிக்கின்றோம் நாளெல்லாம் உங்கள்
அப்பம்மாவுக்கு யாரையா ஆறுதல்?
எம் அனைவரையும் யார் தான் தேற்றிடுவார்?
தேடுகின்றோம் தேடுகின்றோம் எம் பிரேமே! இனி எப்பிறவியில் உங்கள் பூ முகம் காண்போம்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பகவானை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்
**அப்பம்மா, அப்பா அம்மா, சகோதரர்கள், சித்தப்பா, மாமாமார், அந்தைமார், மச்சாள், அத்தான்மார்.**

இல. 26/2A, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (63554)

# நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 3

கொழும்பில் மேலதிக சிகிச்சையைப் பெறுவதற்காகச் செல்லும் நோயாளர்களை அழைத்துச் செல்லும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் கிளையினரின் நோயாளர் கப்பல் சேவை இன்று நடைபெறும்.

இந்தக் கப்பலில் செல்வதற்கென யாழ். போதனா வைத்தியசாலையில் பதிவு செய்த நோயாளர்கள், உதவியாளர்களை இன்றுகாலை 7மணிக்கு முன் யாழ். போதனாவைத்தியசாலைக்கு சமுகம்கொடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (இ-15)

# திருவள்ளுவர் குருபூசை இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 3

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று புதன் பிற்பகல் 5 மணிக்கு திருவள்ளுவர் குருபூசை இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தின் அறநெறிப் பாடசாலை மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் இக் குருபூசையில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும், சைவப்புலவர் க. சத்தியதாசன் நிகழ்த்தும் ''வள்ளுவர் காட்டும் ஒழுக்க நெறி' என்ற தலைப்பிலான சமயச் சொற்பொழிவும் இடம் பெறும். (இ-7)


# பாலர் ஆசிரியராக பயிற்சி

தகைமை
க. பொ. த
சாதாரண தரம்
அல்லது மேல்.
தபாலில் ஆறுமாதங்களில் பயிலலாம்.
**பாலர் ஆசிரியர் சங்கம், கொக்குவில்.**
(63430)


# நிரந்தரசட்ட வைத்திய அதிகாரி இல்லாத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ். போதனா வைத்தியசாலை கடந்த சுமார் 10 வருடங்களுக்கு மேலாக நிரந்தர சட்ட வைத்திய அதிகாரி இல்லாத நிலையில் இயங்கி வருகிறது.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக ஆஸ்பத்திரி நிர்வாகத்தால் நியமிக்கப்படும் உள்ளக வைத்திய அதிகாரிகளே, பதில் சட்ட வைத்திய அதிகாரிகளாக செயற்பட்டு வருகின்றனர் என்று அறிய வந்துள்ளது. (இ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

03 - 03 - 1999



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 12 – 02 – 1914 | 01 – 02 – 1999 |

அமரர்

## நாகமுத்து இராமநாதன்

(கூடம்பத்தை இராமநாதன்)

ஆயிரம் பிறை கண்ட அப்பாவாக
அன்பு நிறைந்த தந்தையாக
வாழ்ந்து மறைந்த எம் குடும்பத் தலைவரின்
பிரிவில் 31 நாள்கள் கடந்து விட்டன.
அவரின் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எங்கள் அன்புத் தந்தையின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். நன்றி!

பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

கிழவானை வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (63539)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்





| திருமதி **கந்தையா பூரணம்** | | அமரர் **கந்தையா சிவசோதி** | |
| --- | --- | --- | --- |
| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
| 04-11-1913 | 11-01-1999 | 20-11-1935 | 02-02-1999 |

எமது தாயார் திருமதி கந்தையா பூரணத்தின் மரணச் சடங்கிலும் கொழும்பில் 02-02-99 இல் காலமான எமது சகோதரனின் இறுதிக் கிரியைகள் வவுனியாவில் நடைபெற்ற போதும் துக்க நிகழ்வில் எங்கள் வீட்டுக்கு வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், தந்தி, தபால் மூலம் அனுதாபங்கள் கூறியவர்களுக்கும், சகல உதவிகள் புரிந்தவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


04-03-99 வியாழனன்று நயினாதீவு தீர்த்தக் கரை மண்டபத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், வீட்டில் நண்பகல் நடைபெறும் ஆத்ம சாந்திப் பூசையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

சுபம்!

**க. கேசவநாதன் - மகன் (சகோதரர்),**
(மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.)
**திருமதி ச. [illegible] (மகள்), அக்கா.**

7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (63553)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

## இரத்தினம் துரைசப்பிள்ளை

(ஒட்டகப்புலம்)

| மண்ணில் அகல் விளக்காய் | விண்ணில் அமர தீபமாய் |
| --- | --- |
| 22 - 05 - 1921 | 01 - 02 - 1999 |

கல்லறையில் உனை வைத்து
கையாலே மண்ணிட்டு
கதறியே அழுது நின்றோம்
உள்ளத்தில் உனை வைத்துப்
பரிதவித்து நிற்கின்றோம் அம்மா!

01-02-1999 இல் இறைவனடி சேர்ந்த எங்கள் தாயாரின் மரணச் சடங்கிலும், திருப்பலியிலும் பங்கு கொண்ட உற்றார், உறவினர், குருக்கள், கன்னியருக்கும், மலர்மாலை, மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் தபால், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் மற்றும் சகல வகையிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, தொடரும் 31 ஆம் நினைவு நாளிலும் அவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காகச் செபிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

-குடும்பத்தினர்.

இல. 5, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (63547)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வார் ஓட்டம்!

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ. இராமேஸ்வரன் அண்மையில் ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் இந்தப்பகுதி மக்களின் வாழ்க்கை நிலையை விவரமாகவும் விளக்கமாகவும் படம் பிடித்துக் காட்டியுள்ளார்— எடுத்துக் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதாக. பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த வழங்கிய பட்டோலைப் பேழையை, பண்டைய அரச முறைப்படி — பிரதான அமைச்சரிடமிருந்து அரசன் பெற்றுக் கொள்வது போல— சந்திரிகா பெற்றுக் கொண்டு மூன்று வருடங்கள் கழிந்து விட்டன!

யாழ்ப்பாண மக்கள் மீளக் குடியேறியும் இன்னும் ஒரு மாதத்தில் மூன்று வருடங்களாகப் போகின்றன

ஆனால் இந்தப் பிரதேசத்து மக்களின் வாழ்க்கை நிலை எவ்வாறு சீர்கெட்டுப் போயுள்ளது என்பதனை நேரில் அறிவதற்காக இந்த நாட்டின் தலைவி ஒருமுறையாவது இங்கு வந்ததில்லை.

எந்த விடயத்தையும் தகவலையும் இரண்டாம் மூன்றாம் பேர்வழிகள் மூலம் கேட்டறிவதைவிட, நேரில் கண்டு, கேட்டு, விசாரித்து அறிந்தாலே நிறைவாகத் தெரிந்துகொள்ள முடியும் ஆனால் தலைவிக்கு அப்படி ஓர் அக்கறை, ஆர்வம் பிறக்கவில்லை.

தமது அதிகாரிகள் தெரிவிக்கும் தகவல்களைக் கொண்டும், சமர்ப்பிக்கும் அறிக்கைகளை வைத்துமே ஜனாதிபதி யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்க்கை நிலைமையை அறிந்து கொள்கிறார். அவற்றின் அடிப்படையில் குடாநாட்டு மக்களின் வாழ்க்கை முன்னேற்றம் கண்டுள்ளதாக மாநாடுகளிலும் கூட்டங்களிலும் பிரசாரம் வேறு செய்கின்றார்!

குடாநாட்டு மக்களின் மன நிலை எவ்வாறு உள்ளது என்பதனைக் கண்டறியும் சந்தர்ப்பம் எதுவும் ஜனாதிபதிக்கு இல்லை.

பலவகை இல்லாமைகள், தாமதங்கள், சுமைகள். தொல்லைகள், துன்பங்கள், வேதனைகளால் குடாநாட்டு மக்கள் நொந்து நொடிந்து விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஓரிரண்டு விடயங்களில் அன்றி திரும்பும் எந்தத் திசையிலும், முனையிலும் துறையிலும் அவர்கள் எதிர்நோக்குவது, அனுபவிப்பது, அவலமும் அலைக்கழிவுமே.

"பாதுகாப்பின் நிமித்தம்" அவர்களின் எல்லாத் தேவைகளும் தறுக்கணிக்கப்படுகின்றன. நிம்மதியான, கௌரவமான, வசதியுள்ள வாழ்க்கை என்பது குடாநாட்டு மக்களுக்குக் கானல் நீராகவே தள்ளிச் செல்கிறது.

இந்த பரிதாபத்துக்குரிய நிலையை ஜனாதிபதி அக்கறையுடன் போக்குவார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அதற்கான நெருக்குதலையும், அழுத்தத்தையும் போடக்கூடிய வல்லமை, சக்தி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அறவே இல்லை. அதற்குரிய காலம் கடந்து போயிற்று!

இனி இவர்களும் சரி, அவர்களும் சரி, வார் ஓட்டம் ஓடிக் காட்டுவார்கள்! அவ்வளவுதான்! குடாநாட்டு மக்களுக்கு அது தெரியாமலில்லை!

# மனித நேயத்துக்கு அடிப்படை அன்பு உள்ளம்; வள்ளுவன் காட்டும் வாழ்க்கை நெறியும் அதுவே!

**கவிமாமணி ம. நாராயணன்**

வள்ளுவர் அன்னை தமிழ் மொழிக்கோ அருமருந்தன்ன மகனாகப், பொன்னனைய பண்புகட்கோர் பொருட் காட்சிப் பெட்டகமாய்த் தன்னைப் புவிக்களித்துத் தரணிக்கே புகழ் குவித்த பெருமைக்குரியவர்.

அள்ள அள்ளக் குறையாத பட்டறிவுக் கருத்துகளை ஆழிசூழ் உலகிற்கெல்லாம் அளித்துலந்த அமுதசுரபி.

அறியாமைக் களர் நிலத்தில் அறிவார்ந்த குறட்பயிரைச் செழிப்புடன் உழுது வைத்த செறிவான பொன்னேருழவர்.

கற்காலம் முதலாகக் கலிகாலம் ஈறாக அனைத்துலகக் கல்லூரிகளின் ஒப்பற்ற துணைவேந்தர்.

எழுசீர் உளி கொண்டு ஈரடிப்பாறைதன்னில் எழிலார்ந்த முப்பாலை வடித்திட்ட கலைச் சிற்பி

மனிதன் மனிதனாக வாழ மாண்புறு நெறிகளையெல்லாம் மணித்தமிழில் சொன்ன மனிதப் பனிமலை.

ஐரிசு நாட்டிலிருந்து கிறிஸ்தவம் பரப்பத் தமிழகம் வந்தார் டாக்டர் ஜி. யூ போப். வந்தவர் குறளைப் படித்தார். பின்பு சொன்னார்.

திருக்குறள் வெள்ளித்தட்டிலே வைக்கப்பட்டிருக்கும் தங்க அப்பிள் — என்றார்.

மற்ற மற்ற நூல்கள் எல்லாம் இறப்பிற்குப் பின் இறைவனைக் காட்டுவதற்காக இருக்கின்ற வாழ்க்கையை நரகமாக்கும் வழிமுறைகளைச் சொல்லின. வள்ளுவரின் குறள் மட்டும் தான் மண்ணிலேயே விண்ணைக் காணலாம் எனக் கூறிப் பாதை அமைத்துத் தந்தது.

'அபுபென் ஆடம்' என்றோர் ஏழை உழவன் வாழ்ந்தான். ஒரு நாள் இரவு அவன் தன் ஓலைக்குடிசையினுள் உறங்கிக் கொண்டிருந்தான். ஒளி வெள்ளம் அவன் முகத்தில் பாய்ந்தது, கண்களைத் திறந்து பார்த்தான். அந்தக் குடிசையினுள் ஒரு மூலையில் கண்களைப் பறிக்கும் பேரழகுடன் ஒரு தேவதை அமர்ந்து விறுவிறுப்பாக எதையோ எழுதிக்கொண்டிருந்தது.

அபு, "தேவதையே! என்ன எழுதிக் கொண்டிக்கிறாய்" என்று கேட்டான்.

'ஒன்றுமில்லை. அபு! இந்த ஊரில் யார்யார் கடவுள் மீது அதிகமாகப் பற்றுச் செலுத்துகிறார்கள் என்றொரு பட்டியல்' என்றது. உடனே அபு, 'அந்தப் பட்டியலில் என்னுடைய பெயரும் இருக்கிறதா என்று பார்த்துச் சொல்லேன்' என்று கேட்டான்.

தேவதையோ பட்டியலை மேலும் கீழுமாகப் பார்த்துவிட்டு 'பொறுத்துக் கொள். அபு! இந்தப் பட்டியலில் உன்னுடைய பெயர் இடம் பெறவில்லை!' என்றாள்.

அபு கொஞ்சமும் கவலைப்படாமல் 'பரவாயில்லை தேவதையே! இந்த புழுக்கை உடலைப் பெண் ஆடம் மனிதர்களிடத்தில் உடன்பிறந்த நேயமுடன் பழகுவேன் என்ற ஒரு வரியை மட்டும் எழுதிக் கொள்!' என்று கூறிவிட்டு உறங்கி விட்டான். தேவதையும் மறைந்து விட்டாள்.

மறுநாள் இரவு; அதே நேரம்; குடிசைக்குள் ஒளி வெள்ளம் பாய்ந்தது. அபு கண் விழித்துப் பார்த்தான்; அந்தத் தேவதை மீண்டும் எதையோ எழுதிக் கொண்டிருந்தாள்.



இன்று வள்ளுவர் குருபூசை நாள்

'இன்று என்ன எழுதிக் கொண்டிருக்கின்றாய் தேவதையே!' என்று கேட்டான் அபு. அந்தத் தேவதை 'கடவுள்' இந்த ஊரில் யார் யாரையெல்லாம் அதிகமாக விரும்புகிறார் என்பதைப் பட்டியலிட்டுக் கொண்டிருக்கிறேன்!' என்றாள்.

'அந்தப் பட்டியலிலாவது என்னுடைய பெயர் இருக்கிறதா! என்று பார்த்துச் சொல்லேன்!' என்று கேட்டான் அபு.

அந்தத் தேவதை பட்டியலை உற்றுப்பார்த்து விட்டு 'அடடே! அபு! இந்தப் பட்டியலில் உன் பெயர் தான் முதலில் இருக்கிறது!' என்று சொல்லி விட்டு மறைந்து போனாள்.

இந்தக் கதையிலிருந்து நாம் பெறுகின்ற உண்மை என்ன...? மனிதர்களை யார் அதிகமாக விரும்புகின்றார்களோ அவர்களே கடவுளின் பேரன்பிற்கு உரிமையானவர்கள் என்பது தானே...!

### மனித நேயம் தேவை

மனிதர்களை உடன் பிறந்தவர்களாக அன்பு செய்யத் தேவை 'மனித நேயம் என்கின்ற உயர்ந்த பண்பாகும். மனித நேயத்திற்கு அடிப்படை அன்பு உள்ளம்' இதற்குச் சாதி - மதம் - நாடு மொழி - இனம் - பட்டம். பதவி போன்றவை பாரங்களாக அமையக்கூடாது; பாலங்களாக அமைய வேண்டும்

மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தாம் ஒரு சிறந்த மனிதனாக எப்படி வாழ வேண்டும் என்கின்ற கலையைக் கற்பதில் ஆர்வம் கொள்வதில்லை; மாறாக சூழ்ச்சி, வஞ்சகம், போட்டி. பொறாமை போன்ற வேண்டாத கலைகளைக் கற்பதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள்.

உலகம் தோன்றிய நாள் முதல் இன்றுவரை இந்தப் பண்பே மேலோங்கி இருப்பதால் தான் எங்கும் வன்முறை, கொலை, கொள்ளை போன்ற அமைதியின்மை மலிந்து கிடக்கின்றன.

முளரியில் (ரோஜாவில்) முள் இருக்கிறதே என்பதற்காக வருத்தப்படாதே: ஒரு முள்செடியிலும் இந்த அழகு மலர் மலர்கிறதே என்பதை நினைத்துப்பார்; உனக்கு உள் அமைதி கிடைக்கும்! என்றார் ஒரு மேலை நாட்டு அறிஞர். அந்த வகையில் அறியாமை என்கின்ற முட்களே சூழ்ந்த இந்த உலகில் ஏசுபிரான், நபிகள் நாயகம், புத்தர், கன்பூசியஸ், காந்தி அடிகள், தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர் போன்ற மலர்களும் அரும்பி. மலர்ந்து. மணம்பரப்பிச் சென்றிருக்கின்றனர் என்பதை நினைத்து. சொல்லளவிற்காவது நாம் மகிழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

நம்மிற் பெரும்பாலானோர் பிறந்தது முதல் இறப்பது வரை ஒரு நாளேனும் மனிதனாக வாழ்வது என்பதைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. சராசரிக்கும் கீழான விலங்கு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் நாம் நினைக்கின்ற நினைப்புகள் ஒன்றா? இரண்டா? இல்லை... ஒரு கோடி! அதுவும் இல்லை: பல கோடிகள் [337] ஆகும்.

இந்த உலகில் எதைப்பார்த்தாலும் அவை நாமாக இருந்துவிடக் கூடாதா? என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி நெஞ்சத்தைப் புண்ணாக்கிக் கொண்டிருக்கின்றோம். ★

(நன்றி: குறளியம்)

### நாளை

மாசி 20

வியாழக்கிழமை

திதி: துதியை

பிற்பகல் 2 22 வரை.

நட்சத்திரம்: உத்தரம்

முற்பகல் 7. 30 வரை

சுபநேரம்: 7.57 - 9 27

ராகுகாலம்: 1.57 - 3 27

(பவலுக்கும் இறைவன் பழைய நேரம்)

### உதய வாக்கு

இறைவனிடம் பக்தி செலுத்துவது தான் மனித வாழ்க்கையின் சாரம்:

**ஸ்ரீ ராமகிருஷ்ணர்**

### மிகப் புகழ் பெற்ற சிறந்த தமிழ்நூல்

இந்தியாவில் ஒற்றுமையைப் பலப்படுத்த வெவ்வேறு மாநிலங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். இதன் பொருட்டு நாம் ஒருவருக்கொருவர் பிறர் மொழியையும் இலக்கியத்தையும் கட்டாயம் அறிந்துகொள்ள வேண்டும். நம்நாட்டின் மிகப்பழமையான மொழி தமிழ். அதன் இலக்கியம் மிகச் சிறந்தது. வட இந்திய மக்கள் தென்னாட்டு மொழிகளை அறிந்து அவற்றின் இலக்கியச் செல்வங்களில் சிறந்து விளங்கும் நூல்களின் இன்பத்தை நுகரவேண்டும். இந்நோக்கத்துடனேயே திருக்குறள் இந்தியில் மொழி பெயர்க்கப்படுகிறது இது வரவேற்கத் தகுந்த சிறந்ததோர் முயற்சியாகும் திருக்குறள் புகழ்பெற்ற ஒரு சிறந்த தமிழ் நூல். இது ஒரு முனிவர் இயற்றிய பொய்யாமொழி. இதில் அவருடைய நீதியுரைகள் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. இந்நூல் மிகப் பயனுடையது. இந்திமொழி பேசும் மக்கள் இந்நூலால் பெரும்பயன் பெறுவர் என்று நம்புகின்றேன்.

**ஆசாரிய நரேந்திரதேவ்**
துணைவேந்தர்

இந்து பல்கலைக்கழகம்
காசி 25 - 3 - 1952

### சனசமூக நிலையங்கள்

அச்சுவேலி, மார்ச் 3

வலி.கிழக்கு பிரதேச சபை அச்சுவேலி உபஅலுவலக பிரதேசத்தில் 28 சனசமூக நிலையங்கள் செயற்படுகின்றன.

இடப்பெயர்வுக்கு முன்னர் செயற்பட்ட சனசமூக நிலையங்களில் 4 சனசமூகநிலையங்கள் செயற்படவில்லை

28 சனசமூக நிலையங்களில் புதுவ நட நிர்வாகிகள் தெரிவுகள் பூர்த்தியடைந்து பிரதேச சனசமூக நிலை ஒன்றியம் அமைக்கப்பட்டுள்ளது.

(இ-11)

### சிரமதானம்

புன்னாலைக்கட்டுவன் மார்ச் 3

புன்னாலைக்கட்டுவன் அரசினர் வைத்தியசாலையும் அதன் சுற்றுப்புறமும் கடந்த திங்கட்கிழமை காலை 9 00 மணிமுதல் பிற்பகல் 3 00 மணி வரை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன.

இந்த சிரமதானத்தில் புன்னாலைக்கட்டுவன் கணேசா சனசமூக நிலைய அங்கத்வர்களும், ஊர் இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

(இ-133)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ். பல்கலைக்கழக புவியியற் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள "கணனியும் அதன் பயன்பாடுகளும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு பொருளியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கணனிப் பகுதித் தலைவர் கலாநிதி எஸ். மகேசன் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு மேற்படி தலைப்பில் விரிவுரை நிகழ்த்துவார்.

(இ-5)

### முத்திரைகள் வந்தன

யாழ். பிரதம தபாலகத்துக்குரிய பெறுமதி வாய்ந்த முத்திரைகள் நேற்று முன்தினம் எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

(உ-7)

### தவக்காலச் சிந்தனை-15

மனித வாழ்வில் அழைப்புகள் பல வடிவங்களில் யாவருக்கும் தரப்படுகிறது. குடும்பத்தலைவராக, ஆசிரியராக, அதிகாரியாக, ஊழியராக எந்த மட்டத்திலும் தம் பொறுப்புகள்— கடமைகளை ஏற்கும் மனநிலையில் மற்றவர்கள் வாழ்வுக்கு பயன்படக் கூடியதாக்கினோமா?

பொறுப்புக்களை அலட்சியப்படுத்தும் போது அதனால் பாதிக்கப்படுபவர்களின் எதிர்காலம் எப்படிப் பாதிப்படைகின்றது என்பதைச் சிந்திக்க அழைப்பு விடப்படுகின்றது,

"கடமையில் தவறியதாலும் பல பாவம் செய்தேன்" என எண்ணித்தவறிய நிகழ்வுகளை எண்ணிப்பாருங்கள். மனித வாழ்வின் அழைப்புடன் தரப்பட்ட கடமைகளை பொறுப்புடன் செய்து முடித்தோமா? பாவங்கள் என கடமையில் தவறும் ஒவ்வொரு கணமும் சிலுவையின் பாரச்சுமைகளை சுமந்து பாவிகளாக வாழ்ந்தோமா? என்கடமைகளைக் கூட மற்றவர் மேல் சுமத்துவோராக இருந்த சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றும் சிலுவையில் ஆணி அடிப்பதுபோல் தவறிழைத்த நிகழ்வுகளின் மூலம் சிலுவைப்பாதையில் பல தடைக்கற்களாக இருந்தமையை ஏற்று கடமையில் தவறாது வாழ தவ நிலையில் சிந்தித்துத்தொடருவோம்.

— யோசப் பாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயலில் வெள்ளம் தேங்குவதால் விதைநெல் பெற முடியாத நிலை

## ஒரே நாளில் 3,186 ஹெக்டேயர் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3
கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதி பெய்த மழையினால் யாழ். மாவட்டத்தில் 3 ஆயிரத்து 186 ஹெக்டேயர் நெல்வயல் வெள்ளத்தில் அமிழ்ந்து போனதால் இவற்றில் இருந்து பெறப்பட்ட நெல்லை விதை நெல்லுக்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் யாழ். மாவட்ட நெற் செய்கையில் 60 சதவீதம் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவிவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் போக நெற்செய்கையில் வரட்சியினால் 770 ஹெக்டேயர் நெற் பயிரும் மழையினால் 477 ஹெக்டேயர் நெற்பயிரும் ஏற்கனவே அழிந்து போயுள்ளன.

பெப்ரவரி மாதம் பெய்த மழைக்கு முன்னர் 2 ஆயிரத்து 300 ஹெக்டேயர் நெல் வயல்கள் அறுவடை செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மழை வெள்ளத்தில் அமிழ்ந்த நெல்லைவிட தற்பொழுது 2 ஆயிரத்து 125 ஹெக்டேயர் நெல்வயல் மட்டுமே அறுவடை செய்யப்படவேண்டியுள்ளது.

தற்பொழுது அறுவடைக் காலமாதலினால் கமக்காரர்கள் தமது வயல் அறுவடைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வலிகாமம் பகுதியில் மட்டும் மழை வெள்ளத்தில் ஆயிரத்து 200 ஹெக்டேயர் நெற் பயிர்கள் அமிழ்ந்து போனது குறிப்பிடத்தக்கது.

நீரில் அமிழ்ந்து போனநெல்லைத் தவிர்த்து உள்ளூரில் 10 ஆயிரம் புசல் விதை நெல்லைப் பெற்று அடுத்த போகத்திற்கு விதைப்பதற்கு தயாராக வைத்திருக்குமாறு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கமநல சேவை நிலைய அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

(இ-5)

# இணுவில், கொடிகாமத்தில் இரு இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 3
இணுவில், கொடிகாமம் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கடந்த 27 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாகராசா சுதர்சன் (வயது 20), இணுவில் மேற்கு என்ற இளைஞன் கந்தர்மடப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு தற்பொழுது 512 பிரிகேட் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கச்சாய், கொடிகாமம்பகுதியைச் சேர்ந்த கந்தசாமி சுதாகரன் (வயது 17) என்பவரையும் முகாமுக்கு வருமாறு அழைத்துப் படையினர் தடுத்து வைத்துள்ளனர்.

இருவரின் கைதுகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ-5)

# நடுத்தர தொழில் முயற்சி; பயிற்சிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 3
யாழ். மாவட்டத்தில் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பவர்களுக்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபை பயிற்சிகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்து வருகிறது.

இதனைத்துரிதமாக செயற்படுத்துவதற்காக தொழிற்றுறைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் சேவையை மேற்படி சபை பெற்றுக் கொள்ளவுள்ளது.

தொழிற்றுறை தொடர்பான பயிற்சி வழங்கக்கூடியவர்களை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் வடமாகாண காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறது.

(இ 5-173)

# 20 ஆயிரம் தேங்காய் விதை கொண்ட நாற்று மேடை

## கமநலசேவை நிலையத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 3
தென்பகுதியிலிருந்து 20 ஆயிரம் தேங்காய் விதைகள் கமநல சேவை நிலையத்தினால் தருவிக்கப்பட்டு தென்னம் நாற்று மேடை அமைக்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை தற்பொழுது கொழும்பில் தங்கியுள்ள கமநல சேவைகள் உதவிப் பணிப்பாளர் எஸ். சுந்தரேசன் மேற்கொண்டு வருகின்றார்.

கடந்த வருடம் 35 ஆயிரம் தேங்காய் விதைகள் கமநல சேவை நிலையத்தினால் தயாரிக்கப்பட்ட நாற்று மேடைகளில் நடுகை செய்யப்பட்டு தென்னம் கன்றுகள் கமநல கேந்திர நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டன.

இந்த வருடமும் மேற்படி நிலையத்தினால் உற்பத்தி செய்யப்படும் தென்னம் நாற்றுக்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

( -5)

# வேலைப் பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 3
நிறுவனங்களை பலப்படுத்துதலும் அபிவிருத்தி செய்தலும் தொடர்பான முழுநாள் வேலைப்பட்டறை ஒன்று கெயர் நிறுவனத்தினால் யாழ். பஸ்ரியன் ஹோட்டலில் இம்மாதம் 5 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

மட்டக்களப்பு கெயர் நிறுவன பொறுப்பாளர் கே. ஜெகநாதன் மற்றும் கெயரின் யாழ். திட்ட முகாமையாளர் கி.அ. அருள்ஞானம் ஆகியோர் இந்த வேலைப் பட்டறையை நடத்தவுள்ளனர்.

(இ-5)

# சேமக்காலை துப்புரவு

கொழும்புத்துறை, மார்ச் 3
யாழ். புனித மரியாள் சேமக்காலை தற்பொழுது துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

(இ-30)

# புகையிலைச் செய்கை பாதிப்பு

கொழும்புத்துறை, மார்ச் 3
புலோலி மேற்குப் பகுதியில் சுருட்டை, குருமன் ஆகிய நோய்களினால் புகையிலைச் செடிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.

இந்த நோயினால் சில இடங்களில் புகையிலைப் பயிர்கள் அழிந்தும் உள்ளன.

விவசாயிகள் இந்த நோயைக் கட்டுப்படுத்த கிருமிநாசனிகளை விசிறும் பணியில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

(இ-30)

# கல்விப் பணிப்பாளர்கள் மாதாந்தம் 25 ஆரம்பப் பாடசாலைகளுக்கு

## கல்விமுன்னேற்ற அறிக்கை அனுப்ப பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3
தரம் ஒன்று வகுப்புக்களைக் கொண்ட ஆரம்பப் பாடசாலைகளுக்கு ஒவ்வொரு வலயக் கல்விப் பணிப்பாளரும் மாதாந்தம் செல்லுதல் வேண்டும் எனவும்—

குறிப்பிட்ட பாடசாலைகளின் கல்வி முன்னேற்றம் குறித்து மாகாணக் கல்வி அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் கல்வி, உயர்கல்வி அமைச்சு சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களையும் சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் அந்த வலயத்தில் உள்ள 25 ஆரம்ப பாடசாலைகளுக்கு சென்று அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

மேற்படி சுற்றறிக்கை யாழ்ப்பாணத்தில் உள்ள சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது தரம் ஒன்று, தரம் ஆறு, தரம் ஒன்பது ஆகிய வகுப்புக்களுக்கு கல்வி அமைச்சினால் புதிய கல்விச் சீர்திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இதற்கமைய தரம் ஒன்று வகுப்புக்களைக் கொண்ட 25 பாடசாலைகளுக்குஒவ்வொரு வலயக்கல்விப் பணிப்பாளரும் சென்று கல்வி முன்னேற்றம் குறித்து சம்பந்தப்பட்ட மாகாணக்கல்வி அமைச்சுக்கு அறிக்கை அனுப்பி வைக்க வேண்டும் எனவும்—

அந்த அறிக்கையை ஒவ்வொரு மாகாணக்கல்வி அமைச்சும் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

# நகரசபைக்கு இலச்சினை

பருத்தித்துறை நகர சபைக்கு இலச்சினை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இலச்சினை பருத்தித்துறைப் பிரதேச மக்களின் வாழ்க்கைத்தர, தொழில் சிறப்புக்களையும் கலாசார விழுமியங்களையும் பிரதேசத்தின் விசேட தன்மைகளையும் பிரதிபலிப்பதாக வடிவமைக்கப்பட்டுள்ளது (ஐ173)

# மாமரங்களுக்கு கிருமிநாசனி

யாழ்ப்பாணம், மார்ச் 3
அச்சுவேலி, பத்தமேனி, அளவெட்டி வடக்கு, தெல்லிப்பழை ஆகிய பகுதிகளிலுள்ள மாமரக் கன்றுகளுக்கு கிருமிநாசனி தெளிக்கப்படவுள்ளது.

பட்டினிக்கு எதிரான நிறுவனம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இம் மாதம் 19 ஆம் திகதி வரை ஈவினை, புன்னாலைக் கட்டுவன், ஏழாலை, அச்சுவேலி, அளவெட்டி, மல்லாகம் போன்ற பகுதிகளிலுள்ள மாமரங்களுக்கு கிருமிநாசனி தெளிக்கப்படும்.

(இ-5)


இன்று

இணுவில் காயத்ரீபீடம் தர்மசாஸ்தா குருகுலத்தில்

உபநயனப் பிரம்மோபதேசம்

உபதேசம் பெறுபவர்கள் :

பிரம்மஸ்ரீ சே. சிவபாலசர்மா - கௌரிசங்கர்

பிரம்மஸ்ரீ சி. ஸ்ரீதரசர்மா - ரகுராம்

முகூர்த்த நேரம்: பகல் 11 30 மணி

இங்ஙனம்

சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்.

(63570)



உ

உபநயன பிரம்மோபதேச சுபநன்முகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான வெகுதானிய ஹு உத்தராயணம் மாசிமாதம் 23 ஆம் நாள் [ 07 - 03 - 1999 ] ஞாயிற்றுக்கிழமை சுவாதி நட்சத்திரமும் பஞ்சமித் திதியும் சித்த யோகமும் கூடிய சுபநன்னாளில் முற்பகல் 10 மணி 26 நிமிடம் முதல் 11 மணி 10 நிமிடம் வரையிலான இடபலக்கின சுபநன்முகூர்த்தத்தில்

இடைக்காடு, தம்பாலை, வளலாய்
பிரம்மஸ்ரீ நா கந்தசாமிக் குருக்களின் பௌத்திரனும்
தெல்லிப்பழை பிரம்மஸ்ரீ நா. சிவசாமிக் குருக்களின் தௌஹித்திரனும்
எமது ஏக குமாரனுமாகிய

சிரஞ்சீவி பிரம்மஸ்ரீ கஜானன சர்மாவுக்கு

யக்ஞோபவீததாரண பிரம்மோபதேச உபநயனம் வண்ணை ஸ்ரீ விசுவேச விநாயகர் துணைகொண்டு ஷெ ஆலய மண்டபத்தில் நடைபெற உள்ளதால் தாங்கள் குடும்ப சமேதராக வந்து ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

உபநயன குரு
''முத்தமிழ் குருமணி'' சகலாகம ''சங்கிரகர்''
சுன்னாகம் கதிரைமலைச் சிவன் தேவஸ்தான பிரதமகுரு
பிரம்மஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
தங்கள் நல்வரவை நாடும்

பிரம்மஸ்ரீ க. பாஸ்கரக் குருக்கள்
சரோஜினிதேவி தம்பதிகள்

ஸ்ரீ விஸ்வேச விநாயகர் கோவில்,
ஐயனார் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். (63561)



கண்ணீர்ப் பூக்கள்

எமது சக மாணவன் சி குகன், மற்றும் ஆண்டு 12 ஐச் சேர்ந்த சி. மயூரன் ஆகியோரின் அன்புத் தாயார்

இராஜேஸ்வரி சின்னத்துரை

அவர்கள் சிவபதமடைந்தமையையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

99 ஆம் ஆண்டு மாணவர்கள்.
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

(63578)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாக சேவைப் பரீட்சை

# திட்டமிட்டபடி 6ஆம் திகதி கொழும்பிலேயே நடக்கும்

### யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 3

இலங்கை நிர்வாக சேவைக்குத் தகுதி காண் அடிப்படையில் ஆள் சேர்ப்புச் செய்வதற்காக நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் 6 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

மேற்படி போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பலர் போக்குவரத்துப் பிரச்சினை காரணமாகக் குறிக்கப்பட்ட பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஒழுங்கு செய்து தருமாறு யாழ் அரச அதிபரிடம் கேட்டிருந்தனர்.

இவ்விடயம் குறித்துத் தாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது வர்தமானி அறிவித்தலின் பிரகாரம் திட்டமிட்டபடி குறிப்பிட்ட தினத்தில் கொழும்பில் மட்டுமே இந்தப் பரீட்சை நடத்தப்படும் எனப் பதில் அளிக்கப்பட்டதாக அரச அதிபர் தெரிவித்தார். (உ-7)

# நேர்முகப் பரீட்சை மண்டப இடமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

மாகாண அரசாங்க சேவை எழுதுவினைஞர் சார்ந்த சேவைகளுக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று யாழ். செயலகத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது.

எதிர்வரும் 6ஆம், 8ஆம் திகதிகளில் இரண்டாம் மண்டபத்துக்கு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டவர்களை முறையே 4ஆம், 5ஆம் திகதிகளில் பிற்பகல் ஒரு மணிக்கு அந்த மண்டபத்துக்கே நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும் படியும்—

ஏனைய மண்டபங்களில் அறிவிக்கப்பட்டபடி மாற்றம் இன்றி நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் என்றும் —

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் அறிவித்துள்ளார். (உ-3)

# பல்கலைக்கழகத்தில் கேட்போர் கூடம் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் புதிதாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள கேட்போர் கூடத்தின் அங்குரார்ப்பண விழா இன்று புதன் பிற்பகல் 3 மணிக்கு நூலகர் திருமதி ரோ. பரராஜசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மற்றும் திருமதி இ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகக், கலந்துகொண்டு கேட்போர் கூடத்தைத் திறந்து வைப்பர்.

மேற்படி கேட்போர் கூடம் கல்விசார் கருத்தரங்குகள் நடத்தவும் பல்கலைக்கழக மாணவர்களின் கட்புலம், செவிப்புலம் சார்ந்த கற்கை நெறிகளுக்கும் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

# கொட்டகைகளை அகற்ற கோரிக்கை

அச்சுவேலி, மார்ச் 3

அச்சுவேலி பஸ் நிலையப் பகுதியில் வியாபார நிலையங்களுக்கு முன்பாக மேலதிகமாக அமைக்கப்பட்டிருக்கும் கொட்டகைகளை அகற்றுமாறு வலி, கிழக்கு பிரதேச சபை வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளது.

வியாபார நிலையங்களுக்கு முன்பாக அமைக்கப்பட்டிருக்கும் கொட்டகைகள் வீதி அபிவிருத்தி அமைப்புக்கும் வடிகால் அபிவிருத்திக்கும் இடையூறாக இருப்பதால் அவற்றை அகற்றி ஒத்துழைப்பு வழங்குமாறு கேரப்பட்டுள்ளது. (இ-11)

# திறப்பு விழா

வலிகாமம் தெற்கு, மார்ச் 3

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் நுண் கருத்திட்டத்தின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் புனரமைக்கப்பட்ட பல கட்டடங்கள் இன்று புதன்கிழமை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படவிருக்கின்றன.

ஏழாலை லெனின் சனசமூக நிலையக் கட்டடம் காலை 9 மணிக்கும்—

உடுவில் கிழக்கு அண்ணா சனசமூக நிலையக் கட்டடம் பிற்பகல் 2 30 மணிக்கும் — திறந்து வைக்கப்படும்.

இந் 5 நிகழ்வில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மேற்படி கட்டடங்களைத் திறந்து வைப்பார். (உ-152)

## பளைப் பிரதேசத்தில்

# குளத்துக்குச் சென்ற இளைஞரை காணவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 3

பளை தம்பகாமம் பகுதியில் உள்ள குளத்தில் மீன் பிடிப்பதற்காக வண்ணான் கேணி என்னும் இடத்தில் இருந்து கடந்த 28 ஆம் திகதி காலை 10 மணிக்குப் புறப்பட்ட மூன்று இளைஞர்கள் குறித்துத் தகவல் இல்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வண்ணான்கேணியைச் சர்ந்த இராசேந்திரம் ரசிரன் (வயது 21), நிருச் செல்வம் நிமால் (வயது 21), ரி. பொன்ராஜா (வயது 24) ஆகிய மூன்று இளைஞர் குறித்தே தகவல் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மீன் பிடிக்கச் சென்ற இந்த மூவரும் சம்பவதினம் மாலை வீடு திரும்பாததையடுத்து அவர்களைத் தேடிச் சென்றதாகவும்—

தம்பகாமம் நெளியாய் அம்மன் கோயிலடியில் அவர்களின் சைக்கிள்கள் மட்டும் காணப்பட்டதாகவும்—

உறவினர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக உறவினர்கள் பளை கத்தாப்பு இராணுவ முகாமிலும் முறைப்பாடு செய்துள்ளனர். (உ-3-5-81-173)

# நுரளையில் தீ விபத்து!

கொழும்பு, மார்ச் 3

நுவரெலியாவில் சென். அனரனீஸ் வீதியில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீவிபத்தில் மூன்று கடைகள் எரிந்து நாசமாகின.

தீயணைக்கும் படையினர் உடன் நடவடிக்கை எடுத்ததால் கடைகளுக்குள் படுத்திருந்த நால்வர் மீட்கப்பட்டதாகவும்—

பாரிய சேதம் தவிர்க்கப்பட்டதாகவும்—

தெரிவிக்கப்பட்டது.

தீவிபத்துக்கான காரணம் தெரியவரவில்லை என்றும்—

பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும்—

மேலும் கூறப்பட்டது. (உ-3-க)

# திருத்தம்

தேவாலய வீதி, சங்கானையைச் சேர்ந்த சோபன்ராஜ் என்பவரின் விசேட அடையாள அட்டையே 27-02-99 இல் தவறிவிட்டது. அந்த அடையாள அட்டையில் தேசிய அடையாள அட்டையின் இலக்கம் 782090410V யும் உள்ளது. தேசிய அடையாள அட்டையும் தொலைந்து போனதான கருத்தில் 01-03-99 உதயன் 4 ஆம் பக்கத்தில் வெளியான விளம்பரம் தவறாகும். திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)


**எந்த வித T. V களையும் பழுது பார்க்கவும் T. V நிகழ்ச்சிகளை தெளிவாகப் பார்க்க அன்ரனாக்கள் பொருத்தவும்**

தெளிவாக ரி. வி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு U.H F. V H F அன்ரனாக்கள் பொருத்திக்கொள்ளவும் புதிய U.H.F. V H.F பூஸ்ரர்கள், அன்ரவாக்கள் வயர்கள், SONY 2032, 2060, 2030 கலர், கறுப்பு வெள்ளை SONY 12'' ரி. விகள் வாங்கிக் கொள்ளவும். சகல ரி. வி, டெக், றேடியோ, மணிக்கூடுகள் பழுது பார்க்கவும்.

**வீனஸ் டெல்கா**

140, K. K. S. வீதி [சத்திரச்சந்தி],
யாழ்ப்பாணம்.

**தலைமையகம்**

284, ஸ்ரான்லி வீதி, [நாகவிகாரை முன்பாக]
யாழ்ப்பாணம்.

T. P 2064 (சி/6666)


# மீளக்குடியேறியோர் பிரதேச அபிவிருத்திக்கு உதவ வேண்டும்

### பிரதேச செயலக திறப்பு விழாவில் உரை

வேலணை, மார்ச் 3

தீவுப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ளோர் தமது பகுதியில் உள்ள அசையும் அசையாச் சொத்துக்களை பாதுகாப்பதன் மூலம் பிரதேச அபிவிருத்திக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்,

இவ்வாறு வேலணையில் மீளப் புனரமைக்கப்பட்ட தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலகத்தைத் திறந்து வைத்துப் பேசிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் தெரிவித்தார்.

வேலணை பிரதேசச் செயலர் செ இரத்தினம் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்ததாவது.

முன்னைய நாடாளுமன்ற உறுப்பினர் கா. பொ. இரத்தினம் இந்தப்பகுதியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டு அரச அலுவலகங்களையும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தினர்.

தொழிலதிபர்களும் கல்விமான்களுமாக விளங்கிய பலர் அரசியல் வாதிகளுடன் வைத்திருந்த தொடர்புகளினால் தீவுப்பகுதி ஓரளவு நலன்களைப் பெற்றது. இடையில் ஏற்பட்ட சம்பவங்கள் வளம் நிறைந்த இந்தப் பிரதேசத்தைச் சின்ன பின்னப் படுத்தி விட்டது.

நான் இங்கு மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய சமயம் மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதியாக இந்தப் பகுதி இருந்தது.

தற்போதும் கஷ்டங்களின் மத்தியில் முடிந்தவரை மக்களின் தேவைகள், பிரச்சினைகள் தீர்வு காணப்பட வேண்டும் என்பதனாலேயே சேதமடைந்த இந்தப் பணிமனையை துரிதமாக புனரமைக்க நடவடிக்கை எடுத்தோம்.

இப்படி அவர் கூறினார்.

வேலணை பிரதேச செயலர் இரத்தினம் தமது தலைமையுரையில் கூறியதாவது:

இரு தடவைகள் விமானத் தாக்குதல்களுக்கு உள்ளான இந்தப் பணிமனை கால் நூற்றாண்டு வரலாற்றைக் கொண்டது. யுத்தம் காரணமாக நாங்கள் எவ்வாறு பல இடங்களுக்கு அலைந்து திரிந்தோமோ அதுபோல் எமது பணிமனையும் தனது சொந்தக் கட்டடத்தை இழந்த நிலையில் பல இடங்களுக்கு மாற்றப்பட்டது.

இதனால் மக்கள் அனுபவித்த சிரமங்கள் பல. இப்போது மக்கள் ஓரளவுக்கு தமது சொந்த இடங்களுக்கு வந்ததனால் பணிமனையை அதற்குரிய இடத்தில் அமைத்து சேவையைத் தொடர வேண்டும் என்பதில் எமது அரசாங்க அதிபர் மிகுந்த அக்கறை கொண்டு நான்கு பிரதேச செயலகங்களில் ஒன்றாக வேலணைக்கும் நிதி ஒதுக்கீடு செய்தார்.

அவருக்கும் இதனை துரிதமாகக் கட்டிமுடிக்க உதவிய பொறியியலாளருக்கும் எங்களது நன்றிகள் உரியவை.

இவ்வாறு அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பேசும் போது,

நடந்து முடிந்த அழிவுகள் ஒருபுறம் இருக்க நாமே எமது பிரதேசத்தின் தொடர்ச்சியான அழிவுகளுக்குக் காரணமாகி விட்டோம். பாடசாலைகள், வீடுகள், பொதுக் கட்டடங்களின் சொத்துக்களை அபகரிப்பதுடன் கற்களையும் எடுத்துச் செல்லுகின்றோம். இன்று எத்தனையோ பாடசாலைகள் இயங்க முடியாமல் இருக்கின்றன. இதனால் பாதிக்கப்படுவது எமது கல்வி.

வேலணை மத்திய மகா வித்தியாலயம். புங்குடுதீவு மகாவித்தியாலயம் இரண்டும் உடனடியாகவே நல்ல முறையில் சீரமைக்கப்படவேண்டும் என்றார்.

திட்டமிடல் பணிப்பாளர் செ. மகாலிங்கம். பிரதிப் பணிப்பாளர் கா. பாலகிருஷ்ணன், வேலணை பிரதேச சபைத் தலைவர் கருணாகர குருமூர்த்தி, முன்னாள் உதவி அரசாங்க அதிபர் ஆ. தியாகராசா உட்பட பலர் உரையாற்றினர்.

முன்னதாக வேலணை முருகன் கோவிலில் இருந்து விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். அதைத் தொடர்ந்து யாழ். அரசாங்க அதிபர் சண்முகநாதன் [illegible] பூசைகளும் இடம்பெற்றன. (இ-167-111)


**WANTED**

Teachers to teach
**Biology/ Chemistry**
to the Advanced Level Classes.

Contact:

**Principal,**
Jaffna College,
Vaddukoddai.

(C/6664)



**கண்ணீர் அஞ்சலி**

எமது முன்னாள் துறைத் தலைவரும்
வவுனியா வளாக பணிப்பாளரும் ஆன பேராசிரியர்
**நா. பாலகிருஸ்ணன்**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி**
**நாகலிங்கம் வள்ளியம்மை**

அவர்கள் 28-02-99 இறைவனடி சேர்ந்தார். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சமூகவிஞ்ஞான மன்றம்
பொருளியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்

(63586)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கீரிமலைப்...

[முதலாம் பக்கத் தொடர்]

கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா ஜனாதிபதியுடன் நேரில் பேசியதாகக் கூறப்படுகின்றது.

காங்கேசன்துறை சிமெந்து ஆலையை தற்போதைய இடத்தில் இயக்க ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாகவும்—

பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு விசேட திட்டம் ஒன்றை தயாரித்து வருவதாகவும்—

இந்த ஆலையை இயக்குவது தொடர்பான பூர்வாங்க வேலைகளில் 75 சதவீதமானவை முடிவடைந்துவிட்டதாகவும்—

எஞ்சிய வேலைகள் இம்மாத இறுதிக்குள் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

தொழிற்சாலையை இயக்க ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி விடுத்த உத்தரவையடுத்து கீரிமலைப் பாதை ஊடாகத் தொழிலாளர் சென்றுவர வடக்கு படைத் தலைமை பச்சைக்கொடி காட்டியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்துள்ளன.

இதேவேளை — சிமெந்து கூட்டுத்தாபன அதிகாரிகள் குழு ஒன்று அடுத்த வாரம் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தவிருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது. (உ-3)

## எதிர்ப்புத்...

(முதலாம் பக்கத் தொடர்)

சுதந்திரத்தை மீறும் செயல் எனத் தெரிவித்து எதிர்வரும் 7 ஆம் திகதி சகல தேவாலயங்களுக்குமுன்பும் வெள்ளை உடை அணிந்து மௌனப் போராட்டம் நடத்துவது என்று கத்தோலிக்க அமைப்புகள் முடிவு செய்துள்ளன.


BITSMANS

கல்வி நிறுவனம்

மானிப்பாய்

A/L 99

சேதன இரசாயனம்

PAPER CLASS

திரு சிவத்திரன்

ஆரம்பம்: 03—03—99

புதன் 3-00 P. M

(63577)



DCS

COLLEGE OF COMPUTER TECHNOLOGY

COMPETITIVE ENTRANCE EXAM

1999/2000

The closing date is Sunday 7th March 1999
Successful candidates will be able to follow either an eight-month DIPLOMA COURSE IN ELECTRONIC DATA PROCESSING or a twelve - month DIPLOMA COURSE IN COMPUTER TECHNOLOGY (Software).

MS OFFICE WEEKEND COURSES

The above weekend courses, which commenced on Sunday 27th February 1999, will begin at 11. 00 a. m (SL Time)

Director (Ad),
DCS,
College of Computer Technology,
124/2, PalalyRoad,
Thirunelvely.

DCS,
P. O. Box NO: 144,
Jaffna.

[63552]


## வெற்றிலை திருடிய சிறுவர்கள்

வலி. கிழக்கு, மார்ச் 3

உரும்பிராய்ப் பகுதியில் உள்ள வெற்றிலைத் தோட்டங்களில் இருந்து வெற்றிலை திருடிய இரு சிறுவர்கள் பொதுமக்களிடம் வகையாக மாட்டிக்கொண்டனர்.

பன்னிரண்டு வயது நிரம்பிய அந்தச் சிறுவர்கள் திருடியதாகக் கூறப்படும் வெற்றிலையை சந்தைக்கு எடுத்துச்செல்ல முனைந்த சமயமே பொதுமக்களால் பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த பல மாதங்களாக இந்தச்சிறுவர்கள் இந்தத்திருட்டுத்தொழிலை மேற்கொண்டு வந்துள்ளனர் எனவிசாரணையில் தெரியவந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இரு சிறுவர்களில் ஒருவர் பாடசாலை செல்லும் மாணவன் எனக் கூறப்பட்டது.

(உ-3-180)

## தகவல்...

[முதலாம் பக்கத் தொடர்]

வழங்கப்படுவதுடன் தகவலாளர் தொடர்பான விவரம் இரகசியமாக வைக்கப்படும் என்றும் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

யாழ். பொலீஸ் தலைமையக இன்ஸ்பெக்டர், உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் அல்லது சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் அல்லது 51 ஆவது படையணிக் கட்டளை அதிகாரி ஆகியோருக்குத் தகவல் தெரிவிக்கலாம் என்று பொலீஸார் அறிவித்துள்ளனர்.

(உ-3-6)

## வெடி விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)

★ லெப்டினன்ட் வில்வதர்சன் (வீரசிங்கம் சபாபதி - மட்டக்களப்பு)

—ஆகியோரும் தமது ஆதரவாளரானராமன் (ஏகாம்பரம் லோகேஸ்வரன் — மல்லாவி) என்பவரும் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். உ-6)

## வன்னிப்...

[முதலாம் பக்கத் தொடர்)

போர் முனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்பட்டது.

எந்த நேரத்திலும் வன்னியில் படை நகர்வு ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலை காணப்படுவதாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. (உ-3-164)

# மாங்குளம் பகுதியில் 4 புலிகள் மரணம்

வவுனியா, மார்ச் 3

மாங்குளம் பகுதியில் நேற்றும், நேற்று முன்தினமும் படையினருடன் ஏற்பட்ட மோதலில் தமது தரப்பில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் —

★ 2 ஆம் லெப்டினன்ட் கஜமுகிலன் (நாகமணி பேரின்பம் — மட்டக்களப்பு)

★ 2 ஆம் லெப்டினன்ட் ஈழக்குட்டி (வைரமுத்து பாக்கியவதி — மட்டக்களப்பு)

★ 2 ஆம் லெப்டினன்ட் அமுதசுரபி (வேலுப்பிள்ளை தனலட்சுமி — மட்டக்களப்பு)

ஆகியோரும் —

நேற்று நடைபெற்ற மோதலில் 2 ஆம் லெப்டினன்ட் சோபிராஜ் (சற்குணசிங்கம் சிறீதரன் — மட்டக்களப்பு) என்பவரும் —

உயிரிழந்ததாகப் 'புலிகளின் குரல்' நேற்றிரவு அறிவித்தது.

(உ-6)

## பட்டதாரிகள் நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ். செயலகத்தில் நடைபெற்றுவரும் பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை இன்று நண்பகல் 12-00 மணி வரையே இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது வரை நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்காதவர்கள் இன்று நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 3

மகளிர் அபிவிருத்தி நிலையம் பாடசாலை மட்டத்தில் உயர்தர மாணவர்களுக்கு நடத்தும் — முரண்பாடுகளைத் தீர்த்தல் தொடர்பான — சமூக ஒன்றிணைப்புக் கருத்தரங்குத் தொடரில் அடுத்த கருத்தரங்கு இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு சென்ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

வணபிதா எஸ். பி. நேசகுமார் பிரதம அதிதியாகவும் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் எஸ். தனபாலன் சிறப்பு அதிதியாகவும் இதில் பங்கு பற்றுவர்.

கலாநிதி சபா. ஜெயராசா, சேவைக்கால ஆலோசகர் பாலாம்பிகைசுப்பிரமணியம், தேசிய கல்வி நிறுவக ஆலோசகர் தனலக்ஷ்மி வில்வநாதன் மகளிர் அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் புஷ்பா சின்னையா ஆகியோர் கருத்துரை வழங்குவர். (உ-3)

# தேர்தலை கண்காணிக்கும் குழு நாளை கூடுகின்றது

தெற்கு மாகாண சபைகளுக்கான தேர்தல் கண்காணிப்புக்குழு முதல் தடவையாக நாளை கூடவிருக்கின்றது.

ஜனாதிபதி தலைமையில் சகல அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் வகையில் கடந்த வாரம் அமைக்கப்பட்ட இந்தக் கண்காணிப்பு குழுவுக்கு எதிர்க்கட்சித் தலைவரும் ஐ. தே. க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த முறைப்பாடு ஒன்று தொடர்பாக ஆராயவே அது நாளை கூடுகின்றது.

தேர்தலையொட்டி அரச சார்பு வேட்பாளர்கள் கூடுதலான சுவரொட்டிகளை ஒட்டியுள்ளதாகவும் —

சுவரொட்டி ஒட்டுவதை நிறுத்தஏற்பாடு செய்யவேண்டும் என்றும் —

ரணில் தனது முறைப்பாட்டில் கோரியிருந்தார்.

சுவரொட்டி ஒட்டுவதன் மூலம் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (உ-3)

## டிராக்டர் தடம் புரண்டதில் 7 படையினர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ்ப்பாணத்தில் படையினர் சென்ற டிராக்டர் ஒன்றின் பெட்டி நேற்றுக் காலை தடம் புரண்டதில் அதில் பயணம் செய்த ஏழு படையினர் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

ஈ. பி. சந்திரகுமார (20 வயது), எஸ். பண்டார (30 வயது), எம். ஏ. ஜெயசிங்க (28 வயது), எஸ் ராஜபக்ஷ (25 வயது), எம். விஜயரத்தின (21 வயது), எஸ். சமிந்த குமார (28 வயது), பி. எஸ். கோமஸ் (33 வயது) ஆகியோரே காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

## ஐ தே. க...

(முதலாம் பக்கத் தொடர்)

300 பேருக்கு அவர் மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார்.

அங்குள்ள அகதி முகாம்களுக்கு சென்று அவர்களுடன் கலந்துரையாடிய அவர் தமது ஒதுக்கீட்டின் கீழ் அங்கு மேற்கொள்ளப்படும் குடிதண்ணீர்த் திட்டத்தைப் பார்வையிட்டார்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர்களை இன்று அவர் சந்திக்கக் கூடும் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

(உ-3-164)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்)

தேர்தல் ஆணையாளர் நீதிமன்ற உத்தரவுக்கு இணங்க தேர்தல் திகதியை நிர்ணயித்துள்ளார் என்றும் —

இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் —

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் திகதி வர்த்தமானியில் பிரசுரமான பின்னர் அதை மாற்ற முடியாது என்று தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார். ஏதாவது சட்ட ஏற்பாட்டின் கீழேயே தேர்தல் திகதியை மாற்றமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-3-6)


வெள்ளை சூ வந்துவிட்டது

வெள்ளைச் சப்பாத்து (TENIS)

கறுப்பு சூ (JOGGER)

கேட்டவர்கள் உடன் வரவும்.

கணபதி சூ பலஸ்

159, நவீன சந்தை,

மின்சாரநிலைய வீதி,

யாழ்ப்பாணம்

(63575)


# வர்த்தகர்கள், ஊழியர்கள் விவரங்கள் சேகரிப்பு

## வவுனியாவில் நடவடிக்கை

வவுனியா நகரில் உள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் அங்கு வேலை செய்யும் ஊழியர்கள் ஆகியோரின் விவரங்களை பொலீஸ் புலனாய்வுப் பிரிவினர் திரட்டி வருகின்றனர்.

இந்த விவரங்களைத் திரட்டுவதற்கென பாதுகாப்பு அமைச்சினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் நேற்று பொலீஸ் புலனாய்வுப் பிரிவினரால் நகரில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு வழங்கப்பட்டன. விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு இன்று தம்மிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று பொலீஸார் உத்தரவிட்டுள்ளனர்.

ஏற்கனவே கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களில் இவ்வாறு வர்த்தக நிலையங்களில் உள்ளோரின் விவரங்கள் திரட்டப்பட்டன. எனினும் வவுனியாவில் இந்த நடைமுறை தற்போதே செயற்படுத்தப்படுகின்றது.

(உ-6-165)

## இந்திய மீனவர் கைது

பங்களாதேஷ் கடற்படையினர் 41 இந்திய மீனவர்களைக் கைது செய்துள்ளதுடன் 4 படகுகளையும் கைப்பற்றியுள்ளதாக பங்களாதேஷ் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

பங்களாதேஹுக்கு உரித்தான வங்காள விரிகுடாக் கடற்பரப்பில் அத்துமீறிப் புகுந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த போதே கைதுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விடுதியில்...

[முதலாம் பக்கத் தொடர்]

விடுதிகளில் தங்குபவர்களில் சந்தேகத்திற்கிடமானவர்கள் பற்றிப் பொலீஸாருக்கு உடனடியாகத் தகவல் தரப்படவேண்டும் என்றும் —

பொலீஸ் அதிரடிப்படையினர் தவிர்ந்த ஏனையோர் விடுதிகளைச் சோதனையிடுவதற்காக வந்தால் அவர்களை அனுமதிக்க வேண்டாம் என்றும் —

வேறுயாரேனும் சோதனை நடத்த முற்பட்டால் அது குறித்து தமக்குத்தகவல் தருமாறும் —

பொலீஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

## செம்மணி...

[முதலாம் பக்கத் தொடர்]

குறித்துச் சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

திட்டமிட்டபடி அரச சட்டத்தரணி, விசாரணை நிபுணர்கள், பாதிப்புற்றோரின் சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள் போன்றோர் எதிர்வரும் 5 ஆம்திகதி யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

பகிரங்க நீதிமன்ற அமர்விலோ அல்லது நீதிவானின் அறையிலோ செம்மணி விடயத்தை 5 ஆம் திகதி எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

அம் முயற்சி பலனளிக்காவிட்டால் குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகிக்கும் வகையில் பொலீஸார் செம்மணிப் பிரதேசத்துக்கு 5 ஆம் திகதியன்று நேரடியாகச் சென்று பூர்வாங்க மதிப்பீடுகளை மேற்கொள்வர்.

செம்மணிப் புதைகுழி விடயத்தை யாழ். நீதிமன்றத்தில் மேற்கொள்வதற்கான கால வரையறை வரம்பு ஒன்றை நாங்கள் வைத்திருக்கிறோம். அந்த வரம்புக்குள் இந்த விடயத்தை மேற்கொள்ள முடியாவிட்டால் அதன் பின்னர் இந்த விடயத்தை வவுனியா நீதிமன்றுக்கு மாற்றுவதற்கு முடிவு செய்துள்ளோம்—

இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-6)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03- 03 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org